13.01.2025 - திங்கட்க்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

விலை ரூபா 40

ஆண்டு: 01 இதழ் : 68 குரோதி வருடம் மார்கழி மாதம் 29 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 13 பக்கங்கள் - 12




## முல்லைத்தீவு கடலில் அத்துமீறி மீன்பிடிக்கும் இந்திய படகுகள்



(அந்தணன்)

முல்லைத்தீவு கடலில் இந்நாட்களில் இந்திய இழுவைப்படகுகள் ஆக்கிரமித்து தங்களின் கடல் வளங்களை சூறையாடிச் செல்வதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனத்தலைவர் ம.அலெக்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்ட கடலில் இந்திய

02 →

## இரு துருவங்கள் சங்கமமாவது சாத்தியமா?

# பதவி பற்றி கவலை வேண்டாம்; ஒன்றிணைய வாருங்கள்-ரணில்

(கனூஷியா புஷ்பகுமார்)

கட்சித் தலைமை பற்றி சிந்திக்காது ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு வெற்றியடைவோம் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

கடுவலை ஆசனத்தின் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளூராட்சி சபை பிரதிநிதிகள் குழுவை சந்தித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள அரசியல் அலுவலகத்திற்கு வருகைத் தந்த கடுவலை ஆசனத்தின் ஐக்கிய





மக்கள் சக்தியின் உள்ளூராட்சி சபை பிரதிநிதிகள் குழு, இரு கட்சிகளும் ஒன்றிணைவது தொடர்பில் கலந்துரையாடியிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் ருவன் விஜேவர்தன, பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள, தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி

02 →

ஐ.தே.க. - ஐ.ம.ச. ஒன்றிணைக்கும் பொறுப்பு தலதா அத்துகோரளவிடம்

## இலங்கை-சீனா ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட முடிவு

ஆர்.மனோசங்கர்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீன விஜயத்தின் போது முதலீடு, மின் துறை, மீன்பிடித்துறை மற்றும் பொருளாதாரம் உள்ளிட்ட ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என அமைச்சரவை அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு மேலதிகமாக, சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கான சீனாவின் உதவியுடன், பொருளாதார மீட்சிக்கான சீனாவின் ஆதரவு குறித்து விவாதிக்கப்படும் என்று வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங்கின் அழைப்





பின் பேரில், ஜனவரி 14 முதல் 17 வரை சீனாவிற்கு உத்தியோகப்பூர்வ பயணமாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அந்நாட்டிற்கு செல்லவுள்ளார்.

02 →

## நெல் கொள்வனவு செய்யும் ஆலை உரிமையாளர்கள் பதிவு செய்வது கட்டாயம்

(கனூஷியா புஷ்பகுமார்)

பெரும்போக காலத்தில் நெல் கொள்வனவு செய்யும் அனைத்து ஆலை உரிமையாளர்கள் மற்றும் களஞ்சியசாலை உரிமையாளர்களும் அரசாங்க நெல் சந்தைப்படுத்தல் சபையில் பதிவு செய்வது கட்டாயம் என வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன தெரிவித்தார்.

பெற்றுக்கொள்ளும் நெல் தொடர்பாக ஒரு தரவுத்தள அமைப்பை உருவாக்குவதும், நெல் இருப்புகளை மறைக்க முடியாத ஒரு திட்டத்தை உருவாக்குவதும் இதன் நோக்கம் என்று பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

தட்டுப்பாடு இல்லாமல் அரிசி வழங்கும் நோக்கில் அரசு நெல் கொள்முதல்

02 →

## களை கட்டும் பொங்கல் வியாபாரம்



படம்: (க.மகாதேவன்)

தைத்திருநாளை முன்னிட்டு உடப்பு பொதுச் சந்தையில் பொங்கலுக்குத் தேவையான பொங்கல் பானைகள் நேற்று(12) விற்பனை செய்யப்பட்டபோது

## தேசிய பட்டியலில் எம்.பியாக ரூ. 5 கோடி இலஞ்சம் வழங்கிய அரிசி வர்த்தகர்

(கனூஷியா புஷ்பகுமார்)

பிரதான அரசியல் எதிர்க்கட்சி ஒன்றின் காரியாலயத்திற்கு சில தினங்களுக்கு முன்னர் சென்ற இந்நாட்டின் பிரபல வர்த்தகர் ஒருவர் அங்கு பதற்றமான நிலைமையை உருவாக்கி பரபரப்பை ஏற்படுத்தியதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தனக்கு தேசியப் பட்டியல் பதவியை வழங்குவதாகக் கூறி, குறித்த கட்சியின் பிரதானி ஒருவர் ஐந்து கோடி ரூபாவை பெற்றுக்கொண்ட போதிலும் தேசியப் பட்டியல் பதவி தனக்கு வழங்கப்படவில்லை என குற்றம் சுமத்தி குறித்த பணத்தை உடனடியாக மீள வழங்குமாறு அக்கட்சியின் காரியாலயத்தை முற்றுகையிட்டதாக தெரியவருகிறது. இந்த சம்பவத்தால்

02 →

## மனநலப் பாதிப்புகளுக்கு தீர்வு கோரி 78,000 தொலைபேசி அழைப்புகள்

(ஆர்.மனோசங்கர்)



மனநலப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கோரி, கடந்த ஆண்டு (2024) தேசிய மனநல நிறுவனத்திற்கு சுமார் 78,000 தொலைபேசி அழைப்புகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கபட்டுகிறது.

வீட்டு வன்முறை, இணையக் குற்றம், பாலியல் துன்புறுத்தல், போதைப்பொருள் தொடர்பான பிரச்சினைகள், மருந்து தொடர்பான பிரச்சினைகள், பாலினம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் கல்வி தொடர்பான பிரச்சினைகள்

02 →

## நெல் அறுவடை ஆரம்பம்: அரிசி இறக்குமதி நிறுத்தம்

(கனூஷியா புஷ்பகுமார்)

அரிசியை இனிமேலும் இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இல்லை எனவும் அதன் காரணமாக அரிசி இறக்குமதிக்கான கால அவகாசம் நீடிக்கப்படாது எனவும் வர்த்தக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் எமது சகோதர ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் கடந்த டிசம்பர் மாதம் 4ஆம் திகதி அனுமதிப்பத்திரமின்றி அரிசியை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கியிருந்தது.

குறித்த அனுமதியுடன் தனியார் இறக்குமதியாளர்கள் மூலம் 150,000

02 →

## சென்னையில் உலக அயலகத் தமிழர் தின மாநாடு




உலக அயலகத் தமிழர் தினம் 2025 நேற்று முன்தினம் தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரத்தின் நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்றது. இதன் முதல் நாள் நிகழ்வுகளை தமிழ்நாட்டின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

02 →

## புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி 18 ல் நிறைவு

(முகம்மட் முக்தார்)

உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கமைய கடந்த 08 ம் திகதி ஆரம்பமான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 18 ம் திகதி முடிவடையுமென பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்போது விடைத்தாள்கள் நாடு பூராக முக்கிய

02 →

## மார்ச் இறுதியில் உள்ளூராட்சி தேர்தலை நடத்த முடியும்

### முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

மார்ச் மாத இறுதியில் அல்லது ஏப்ரல் மாத தொடக்கத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியும் என முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.



பாணந்துறை பகுதியில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், உள்ளூராட்சி தேர்தலுக்காக முன்னர் கோரப்பட்டிருந்த வேட்புமனுக்களை இரத்து செய்து புதிய வேட்புமனுக்களைக் கோருவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கும் வகையிலான சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது.

02 →

# பீ.எம்.எம்.ஏ. காதரின் ஓராண்டு நினைவுகள்
# மருதமுனையில் இன்று நிகழ்வு

மருதமுனை ஊடகப் பேரவையின் ஏற்பாட்டில் "நினைந்து பேசுதல்" பீ.எம்.எம்.ஏ.காதர் மீதான ஓராண்டு நினைவுகள் நிகழ்வொன்று மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் இன்று (13.01.2025) திங்கள் மாலை 3.30 மணிக்கு நடைபெறும்.

பேரவையின் தலைவர் எம்.எல்.எம். ஜமால்டீன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை இருக்கைப் பேராசிரியர் றமீஸ் அப்துல்லா, தமிழ்துறை விரிவுரையாளர் எம்.அப்துல் றஸாக் ஆகியோர் சிறப்புரையாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

தினகரன், வார மஞ்சரிகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், தினகரன் கட்டுரை ஆசிரியர் எஸ். பாண்டியன், வீரகேசரி உதவி செய்தி ஆசிரியர் ஜே.ஜி. ஸ்டீபன்,

விடிவெள்ளி ஆசிரியர் எம்.பீ.எம். பைறூஸ், தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சிவராசா, ஒருவன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் க.குணராசா, உதயம் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என்.எம்.அமீன் ஆகியோரும் விஷேட பேச்சாளர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்

மருதமுனை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் விரிவுரையாளர் எப்.எம்.அகமது அன்சார் மௌலானா உட்பட பேரவையின் உறுப்பினர்களும் உரையாற்றவுள்ளதுடன் சிறப்பு நிகழ்வுகளும் இடம்பெவுள்ளன.

ஊடகவியலாளரும் பிறை எப்.எம். அறிவிப்பாளருமான ஏ.எல்.எம்.ஷினாஸ் நிகழ்வினை தொகுத்து வழங்கவுள்ளார்.

மர்ஹூம் பீ.எம்.எம்.ஏ.காதரின் குடும்ப உறுப்பினர் ஏற்புரையுடன் நிறைவுபெறவுள்ள இந்நிகழ்வில் வரையறுக்கப்பட்ட தலைப்புகளில் நேர ஒதுக்குதல்களுடன் உரைகள் இடம்பெவுள்ளன.

காதரின் ஊடகப் பணிகளை எதிர்கால சந்ததியினருக்கு அடையாளப்படுத்தும் நோக்கில் ஊடகப் பணிக்கான கௌரப் பட்டமொன்றும் வழங்கப்படவுள்ளதாக நிகழ்வின் ஒருங்கிணைப்பாளரும் ஊடகப்பேரவையின் பொதுச் செயலாளருமான ஜெஸ்மி எம்.மூஸா தெரிவித்துள்ளார்.

# இலங்கையை பெற்றோலிய மையமாக மாற்ற திட்டம் திருமலைக்கு விரையும் தூதுக் குழு

(ஆர்.மனோசங்கர்)

தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கையை ஒரு பெற்றோலிய மையமாக நிறுவுவதற்கான ஆரம்ப பணிகளை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தொடங்கியுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் கடந்த வாரம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா , குவைத் மற்றும் கத்தார் ஆகிய நாடுகளின் தூதர்களுடன் நடத்தப்பட்டதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜனக ராஜகருணா தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களை மேம்படுத்துதல் மற்றும் திருகோணமலையில் புதிய எண்ணெய்க் குதங்களை நிர்மாணித்தல் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

“இலங்கையின் புவியியல் இருப்பிடம் மற்றும் திருகோணமலை துறைமுகத்தின் நன்மைகளைக் கருத்தில் கொண்டு, பெற்றோலியப் பொருட்களை சுத்திகரித்து ஏற்றுமதி செய்வதற்கான பிராந்திய மையமாக இலங்கை மாற முடியும்” என்று ராஜகருணா தெரிவித்துள்ளார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடியுடன் திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் அமைந்துள்ள தளத்தை ஆய்வு செய்வதற்காக தூதுக்குழு நேற்று முன்தினம்(12) திருகோணமலைக்குச் சென்றது.

எண்ணெய் கப்பல்களை நிறுத்துவதற்காக கட்டப்படவுள்ள புதிய தளம் மற்றும் புதிய பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்திற்கான தளத்தையும் தூதுக்குழு இதன்போது பார்வையிடும்.

மூன்று நாடுகளிலிருந்தும் சாதகமான பதில்கள் கிடைத்ததாக ஜனக ராஜகருணா கூறியுள்ளார். விரிவான கலந்துரையாடல்களுக்காக தொழில்துறை துறை பிரதிநிதிகள் விரைவில் இலங்கைக்கு வருகை தர உள்ளனர்.

கெரவலப்பிட்டியை தளமாகக் கொண்ட இயற்கை எரிவாயு (LNG) பங்கரிங் திட்டத்தைத் தொடங்க கத்தார் தூதர் ஒப்புக்கொண்டுள்ளார்.

நீண்ட கால ஒப்பந்தங்களுடன், எந்த இடைத்தரகர்களும் இல்லாமல் அரசாங்கத்திற்கு இடையிலான (G2G) ஒப்பந்தங்களின் கீழ் எரிபொருளை வாங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் தூதர்களுடனான கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், சப்புகஸ்கந்தையில் மற்றொரு சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிக்கவும், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, திருகோணமலையில் பெற்றோலியத் துறை மேம்பாட்டுத் திட்டங்களில் இந்தியாவும் ஆர்வம் காட்டியுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்திய எண்ணெய் நிறுவனம் (LIOC) இடையேயான கூட்டு முயற்சியான திருகோணமலை பெற்றோலியம் டெர்மினல் லிமிடெட் (TPT) அமைப்பதற்கான ஆர்வ வெளிப்பாடுகள் (EOI) கோரப்பட்டுள்ளன.

இந்த திட்டம் இந்தியாவிற்கு குத்தகைக்கு விடப்பட்ட திருகோணமலையில் உள்ள 61 எண்ணெய்க் குதங்களை அடிப்படையாகக் கொண்டது. இந்த கூட்டு முயற்சியின் 51 சதவீத பங்குகளை வைத்திருக்க இலங்கை ஆர்வம் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தைப்பொங்கலை முன்னிட்டு விசேட பஸ் சேவைகள்

(கனுஷியா புஷ்பகுமார்)

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான சுமார் 100 பஸ்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

வழக்கமான பஸ் சேவைகளுக்கு மேலதிகமாக இந்த பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டை மத்திய பேருந்து நிலையத்திலிருந்து ஹற்றன், பதுளை மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மேலதிக பஸ்கள் இயக்கப்படும் என்று இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, போதுமான தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தனியார் பேருந்து சங்கங்கள் தெரிவிக்கின்றன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### தேசிய பட்டியலில் எம்பியாக...

அக் கட்சி அலுவலகத்தில் பெரும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

பிரபல வர்த்தகர் ஒருவருக்கு தேசியப் பட்டியல் பதவி வழங்குவதாக வாக்குறுதி அளித்ததால் பொலன்னறுவையில் உள்ள ஒரு ஹோட்டலில் அந்த அரசியல் கட்சியின் தலைவரின் நெருங்கிய நண்பருக்கு, ஐம்பது கோடி ரூபா வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

பொலன்னறுவையின் பிரதான அரிசி வர்த்தகர் ஒருவரே இவ்வாறு தேசியப் பட்டியல் உறுப்பினராவதற்காக பணத்தை வழங்கியுள்ளார்.

குறித்த வர்த்தகர் கட்சி அலுவலகத்திற்கு வந்து இது தொடர்பாக கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தபோது, அங்கிருந்த அதிகாரிகள், "உங்களைப் பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது. பணத்தை எடுத்தவர்களிடமிருந்து அதை நீங்கள் பெற்றுக்கொண்டால் நல்லது" என்று கூறியதாக அறியக்கிடைக்கின்றது.

பின்னர் அந்த தொழிலதிபர், " பணத்தை எப்படி பெறவேண்டும் என எனக்குத் தெரியும், நான் அதை பெற்றுக்கொள்கிறேன்" என்று கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு வெளியேறியுள்ளார்.

கட்சியுடன் மிகவும் நெருக்கமாகவும் தீவிரமாகவும் செயற்பட்டு வரும் மற்றுமொரு பிரபல வர்த்தகர் மீது தொழிலதிபர் இந்தக் குற்றச்சாட்டை சுமத்துவதாக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து கட்சிக்குள் கடுமையான நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### சென்னையில் உலக அயலகத்..

இம்மாநாட்டிற்கு சிறப்பு விருந்தினர்களாக இலங்கையிலிருந்து பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் மற்றும் கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் ஆகியோர் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் அழைப்பின் பேரில் கலந்துகொண்டனர். பிரதி அமைச்சரின் ஆலோசகரும் பிரத்தியேக செயலாளருமான கலாநிதி சிவப்பிரகாசமும் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டார்

### நெல் அறுவடை..

மெட்றிக் தொன்னுக்கும் அதிகமான அரிசித் தொகை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கு மேலும் அரிசியை இறக்குமதி செய்தால் சிக்கலான நிலை உருவாகும் வாய்ப்புகள் உள்ளதாக குறித்த உயர் அதிகாரி சுட்டிக்காட்டினார். பல பிரதேசங்களில் நெல் அறுவடை ஏற்கனவே ஆரம்பித்து விட்டதாகவும் எதிர்வரும் நாட்களில் அரிசிப் பிரச்சினை இருக்காது என எதிர்ப்பார்ப்பதாகவும் கூறப்படுகிறது.

அனுமதிப்பத்திரமின்றி அரிசி இறக்குமதிக்காக அரசாங்கம் வழங்கியிருந்த கால அவகாசம் கடந்த 10ஆம் திகதியுடன் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது

### முல்லைத்தீவு கடலில்...

இழுவைப்படகுகளின் ஆக்கிரமிப்பு அதிகரித்து காணப்படுகின்றது. இதனால் எமது மீனவர்கள் பெரும் சிரமத்தினை எதிர்நோக்கியுள்ளார்கள். கடற்தொழிலுக்கு செல்லும் எமது மீனவர்கள் கடலில் இருந்து எமக்கு இது தொடர்பில் முறைப்பாடு செய்வதோடு இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பை காணொளியும் எடுத்து அனுப்புகின்றனர்.

பகலில் தூரத்தில் இருக்கும் இந்திய இழுவைப்படகுகள் இரவு நேரங்களில் கரையில் இருந்து சுமார் ஒன்றரை கிலோமீற்றர் தூரத்திற்குள் வருகின்றார்கள். இந்திய இழுவைப்படகு வருகை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளோம், அதேவேளை கடற்தொழில் அமைச்சருக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

முல்லைத்தீவு மாவட்ட கடலில் இப்போதுதான் மீன்பிடி சீசன். தற்போது இறால் சீசனும் தொடங்கியுள்ளது. இத்தருணத்தில் இந்திய மீனவர்களின் இழுவைப்படகு தொழிலால் எங்கள் கடல் வளமும் தொழிலும் பாதிக்கப்படுகின்றது.

கடற்றொழிலுக்காக வங்கிகளில் கடன் எடுத்தும் நகைகளை அடகு வைத்துமே எங்கள் மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டுவருகின்றனர். இந்திய இழுவைப்படகுகளால் எங்கள் மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை கடற்றொழில் அமைச்சரிடம் நான் முறையிட்டபோது, அவர் இந்தியாவில் இருப்பதாகவும் இது தொடர்பில் தான் நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார். இந்திய இழுவைப்படகுகளை அரசாங்கம் முற்றுமுழுதாக தடைசெய்து, எமது கடல் வளத்தையும் மீனவர்களையும் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்

### நெல் கொள்வனவு...

திட்டத்தை செயல்படுத்தி வருவதாகவும் பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். நெல் மற்றும் அரிசிக்கான உத்தரவாத விலையை ஒரே நேரத்தில் தீர்மானித்து வர்த்தமானியில் வெளியிட அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்

### மனநலப் பாதிப்புகளுக்கு...

ஆகியவற்றுக்கு தீர்வுகளைக் கோரி இவ்வாறு அழைப்புகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சுமார் 26,000 பேரின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க பணியாற்றியுள்ளதாக தேசிய மனநல நிறுவனத்தின் சிறப்பு மனநல மருத்துவர் புஷ்பா ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இணையம் மூலம் ஏற்படும் அழுத்தங்களால் மனநலப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய ஏராளமான மக்கள், அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண தேசிய மனநல நிறுவனத்தின் 1926 என்ற துரித சேவை இலக்கத்துக்கு தொடர்பு கொண்டுள்ளனர். அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க மனநல நிறுவனம் hithawathiya. com உடன் இணைந்து செயல்படுகிறது.குறிப்பாக 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்தப் பிரச்சினைகளுக்கு ஆளாகிறார்கள் என்று அவர் மேலும் கூறியுள்ளார்

### புலமைப்பரிசில் பரீட்சை...

நகரங்களில் அமைக்கப்பட்டுள்ள 64 விடைத்தாள் திருத்தும் நிலையங்களில் திருத்தப்பட்டு வருகின்றன.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் நடைபெற்ற மேற்படி பரீட்சைக்கு சிங்கள மொழி மூலம் 244,092 மாணவர்களும் தமிழ் மொழி மூல மாணவர்கள் 79,787 பேரும் தோற்றியிருந்தனர்.

மேற்படி பரீட்சையின் 03 வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னரே கசிந்தமை காரணமாக ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளால் விடைத்தாள் திருத்தம் திட்டமிடப்பட்ட தினங்களில் நடைபெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இப்பரீட்சையின் முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் நாட்டிலுள்ள பிரபல பாடசாலைகளுக்கு 06 ம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும் செயற்பாடுகள் ஏப்ரல் புதுவருட விடுமுறைக்கு பின்னர் இடம்பெறுமெனவும் கல்வி அமைச்சின் மூலம் தெரியவருகிறது

### ஏழு புரிந்துணர்வு

இந்த விஜயத்தின் போது, ஜனாதிபதி, பரஸ்பர ஆர்வமுள்ள பல்வேறு துறைகள் குறித்து அந்நாட்டு ஜனாதிபதி ஷீ ஜின்பிங்குடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

மேலும் சீனப் பிரதமர் லி கியாங் மற்றும் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுத் தலைவர் ஜாவோ லெஜி ஆகியோரையும் ஜனாதிபதி அநுரகுமார சந்திக்கவுள்ளார்.

முன்மொழியப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் விவசாயம், சுற்றுலா, கல்வி மற்றும் தொழில்நுட்பம் போன்ற துறைகளும் அடங்கும் என்று அமைச்சர் ஹேரத் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பை டிஜிட்டல் மயமாக்குவதற்கு சீனாவின் ஆதரவை இலங்கை நாடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மீன்வளத் துறை குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், மீனவர்களுக்கு வீட்டுவசதித் திட்டத்தை வழங்குவது உள்ளிட்ட சமூக நலத்திட்டங்களை உள்ளடக்கும், அதே நேரத்தில் விவசாயத் துறையில், புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் ஆதரவைப் பெறும். சீன உதவியுடன் சூரிய மின்சக்தித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் ஒன்றில் உள்ளடக்கப்படுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கல்வித் துறை குறித்த பேச்சுவார்த்தைகள், இலவச பாடசாலை சீருடை துணிகளைப் பெறுவதிலும், பாடசாலைகளுக்கான ஸ்மார்ட் போர்ட் திட்டம் குறித்தும் கவனம் செலுத்தப்படும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதலீடுகளை ஈர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக சிச்சுவான் மாகாணத்தின் தலைநகரான செங்டுவில் உள்ள தொழில்நுட்ப பூங்காக்கள் மற்றும் வாகன அசெம்பிளி ஆலைகளை ஜனாதிபதி பார்வையிடவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்

### பதவி பற்றி கவலை...

சபை பிரதிநிதிகளும் இதில் கலந்துக்கொண்டிருந்தனர்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க,

“ இவ்வாறு இரு கட்சிகளும் ஒன்றிணைவது நாட்டிற்கு நல்லதொரு வாய்ப்பு. 1991ஆம் ஆண்டில் கட்சி இரண்டாகப் பிரிவதற்கிருந்தது, எனினும் ஜனாதிபதி பிரேமதாசவைப் பாதுகாத்து, முன்னோக்கி கொண்டு செல்லும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன்.” எனத் தெரிவித்தார்.

மேலும், தலதா அத்துகோரளவின் சகோதரரும் தனக்கு உதவியதாகவும் தற்போது தலதா அதுகோரள, அனைத்து தரப்பினரிடமும் பேசி அவர்களை ஒன்றிணைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, புதியதொரு பயணத்திற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணி ஆகியவை இணைய வேண்டும் என அக்கட்சிகளின் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட தரப்பினர் கட்சித் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்ததாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன.

கடந்த வாரம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் நிர்வாகக் குழு கூட்டத்தில், 15 உறுப்பினர்களில் 14 பேர் இந்த கருத்தை வெளிப்படுத்தியதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.தற்போது இருப்பதைப் போல் பிரிந்து செயல்பட்டால் எந்த ஒரு தரப்பினருக்கும் வெற்றியடைய முடியாது என நிர்வாகக்குழு கூட்டத்தில் உறுப்பினர்கள் வெளியப்படுத்தியிருந்தனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியிலேயே இந்த இரு கட்சியும் இணைய வேண்டும் என உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் செயற்பாட்டாளர்கள் எடுத்துக்காட்டியிருந்தனர்.

இந்தத் தேவையை வலுவாக வலியுறுத்தி, தலதா அதுகோரள நாடாளுமன்றத்தில் சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டு, ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது

### மார்ச் இறுதியில்

அந்த சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்குப் போதியளவு கால அவகாசம் உள்ளது. எனவே, அதனை நிறைவேற்றி மூன்று மாதங்களுக்குள் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்தக்கூடிய சட்டரீதியான இயலுமைகள் கிடைக்கப்பெறும். அதற்கமைய, மார்ச் மாத இறுதியில் அல்லது ஏப்ரல் மாத ஆரம்பத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியும்.

# நான்கு புதிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் சத்தியப்பிரமாணம்



நான்கு புதிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் நேற்று (12) முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தனர்.

அதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான ஆர்.எம்.எஸ். ராஜகருணா, மேனகா விஜேசுந்தர, சம்பத் பி. அபேகோன் மற்றும் எம்.எஸ்.கே.பி. விஜேரத்ன ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் புதிய உயர் நீதிமன்ற நீதிபதிகளாகப் பதவியேற்றனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 28ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை

**மேஷம்** இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

**ரிஷபம்** உரையாடலின் போது கவனமாக இருங்கள்.

**மிதுனம்** இன்றைய நாளை சிறப்பாக திட்டமிடவேண்டும்.

**கடகம்** செயல்களை சரியாக திட்டமிட்டுச் செய்தால் வெற்றி.

**சிம்மம்** நலன் பெருகும். இன்று பயணங்கள் உண்டு.

**கன்னி** முயற்சி சிறியதாக இருந்தாலும் வெற்றி காண்பீர்கள்.

**துலாம்** பணியில் சவால்களும் போட்டிகளும் நிறைந்து காணப்படும்.

**விருச்சிகம்** இன்று நீங்கள் பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

**தனுசு** முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தள்ளிப்போட வேண்டும்

**மகரம்** இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள்.

**கும்பம்** இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்** ஆன்மீக ஈடுபாடு மன ஆறுதலையும் தரும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று அதிகாலை 04:58 வரை திரயோதசி பின்பு சதுர்த்தசி.

**நட்சத்திரம்:** இன்று காலை 11:46 வரை மிருகசீரிஷம் பின்பு திருவாதிரை.

**யோகம்:** சித்த.

**சந்திராஷ்டமம்:** அனுஷம், கேட்டை

**சூலம்:** கிழக்கு.

**இராகு காலம்:** 07:30 AM முதல் 09:00 PM வரை.

**குளிகை:** 01:30 PM முதல் 03:00 PM வரை.

**எமகண்டம்:** 10:30 PM முதல் 12:00 PM வரை.

## சிறந்த பண்பாட்டுத் தூதுவர் விருது கண்டி சந்தீப்பிற்கு



(கண்டி நிருபர்)

கண்டியைச் சேர்ந்த கிருஷ்ணகாந்தன் சந்தீப் சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடமிருந்து சிறந்த பண்பாட்டுத் தூதுவருக்கான விருதினைப் பெற்றுக் கொண்டார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சென்னையில் நடைபெற்ற அயலகத் தமிழர் விழா 2025 நிகழ்விலையே இவ்விருது வழங்கப்பட்டது,

தமிழ் நாட்டின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு அமைச்சு மூலம் நடத்தப்பட்ட 'வேர்களைத் தேடி' என்ற திட்டத்தின் மூலம் இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் தமிழ், கலை, பண்பாட்டு ஒப்பந்தங்களுக்கு காரணமானவர் என்ற ரீதியில் கிருஷ்ண காந்தன் சந்தீப்பிற்கு இவ்விருது வழங்கப்பட்டது.

# வீதியில் சென்ற பாடசாலை மாணவி இளைஞரால் பகிரங்கமாக கடத்தல்

### வெளியான சிசிடிவி காட்சிகளால் பரபரப்பு



(ஆர்.மனோசங்கர்)

பாடசாலை மாணவி ஒருவரை வலுக்கட்டாயமாக வானில் கடத்தி செல்லும் காட்சிகள் அடங்கிய சிசிடிவி காணொளிகள் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டு இளம் முஸ்லிம் பாடசாலை மாணவிகள் பாதையில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, ஒரு சிறிய கருப்பு வானில் வந்த குழுவினர், மாணவி ஒருவரை வலுக்கட்டாயமாக கடத்திச் சென்றுள்ளனர்.

பயந்துபோன மற்றொரு மாணவி அங்கிருந்து ஓடியதுடன், வீதியில் சென்ற இளைஞர் ஒருவர் உடனடியாக கடத்தப்பட்ட பெண்ணை காப்பாற்ற கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தவுலகல, ஹபுகஹயதென்ன பகுதியில் சனிக்கிழமை (11) காலை 7.45 மணியளவில் நடந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடத்தலுடன் தொடர்புடைய வான் பொலன்னறுவை நகரில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும், குறித்த வாகனம் வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

கடத்தப்பட்ட மாணவி மற்றும் கடத்தலை மேற்கொண்ட நபர் குறித்து எந்த தகவலும் வெளியாக வில்லை. எவ்வாறாயினும், கடத்தலில் ஈடுபட்ட நபர் கடத்தப்பட்ட மாணவியின் உறவினர் என்பது தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## முன்னாள் அமைச்சர் இந்திரதாச ஹெட்டியாராச்சி காலமானார்



முன்னாள் அமைச்சரும் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இந்திரதாச ஹெட்டியாராச்சி காலமானார்.

அவர் நேற்றுமுன்தினம் இரவு (11) காலமானார். உயிரிழக்கும் போது அவருக்கு 98 வயதாகும்.

1977ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித் துவப்படுத்தி நாடாளுமன்றத்திற்கு தெரிவான அவர், 1993 வரை 17 ஆண்டுகள் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித் துவப்படுத்திய

அவர் தென்னை தொழில்கள் மற்றும் பயிர் பல்வகைப்படுத்தல் அமைச்சுப் பதவிகளை வகித்துள் ளார்.

அன்னாரின் பூதவுடல் தற்போது பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (13) இரவு முதல் ஹேனேகம, பொகுனு விட்டவில் உள்ள அவரது வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.அதன்படி, இறுதிக் கிரியை புதன்கிழமை (15) பொகுனுவிட்ட, ஹேனேகம, ஜனசெத பொது மயான பூமியில் நடைபெற உள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# திருமலையில் மக்கள் குடியிருப்பு கடலுக்குள் உள்வாங்கப்படும் அபாயம்!



(திருமலை நிருபர்)

திருகோணமலை – வீரநகர் கரையோரப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புப் பகுதி திடீரென கடலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் அச்ச மடைந்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக கடலரிப்பின் காரணமாக அப்பகுதி கடலுக்குள் உள்வாங்கப்பட்டு வருவதாகவும் இவ்வாறான காட்சியை தம் வாழ்வில் முதல் முறை காண்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த கடலரிப்பினால் கடற்கரையை அண்டி காணப்படும் சில வீடுகளின் மதில்கள், அத்திவாரம், சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளன.

இக்கடற்பகுதியில் பாரிய இரும்புப் பின்னல் தொகுதியொன்று, கரையின் நீளமான பகுதிக்கு வெளி வருவதாகவும், இது என்ன என்பது தொடர்பில் அறிய முடியாதுள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். கடலரிப்பில் இருந்து தம்மை பாதுகாப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## ஓய்வூதிய அதிகரிப்பு நிலுவையை ஜனவரி முதல் வழங்க அரசு இணக்கம்

(முகம்மட் முக்தார்)

அரச சேவையில் இருந்து 2016 முதல் 2019 வரையான காலப்பகுதியில் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதிய அதிகரிப்பை 2025 ஜனவரி முதல் வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக ஓய்வூதியர்களின் உரிமை காக்கும் தேசிய இயக்க செயலாளர். சரத் லால் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பான பேச்சு வார்த்தை நேற்று முன்தினம்(11) பொது நிருவாக அமைச்சில் அமைச்சர் பேராசிரியர்.சந்தன அபேரட்ணவுக்கும் ஓய்வூதியர்களின் உரிமைகாக்கும் தேசிய இயக்கத்தினருக்குமிடையில் இடம் பெற்றது.இதன்போது இதற்கான இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதற்கான நிதி ஏற்கனவே வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் 2025 ஜனவரி முதல் அதிகரிக்கப்பட்ட ஓய்வூதிய உயர்வை நிலுவையின்றி வழங்குவதாகவும் 2020 முதல் வழங்க வேண்டிய நிலுவை தொடர்பாக பின்னர் தீர்மானம் எடுக்கப்படுமெனவும் அமைச்சரால் தெரிவிக்கப்பட்டதாகவும் சரத்லால் பெரேரா தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் இடம்பெற்ற இத் தீர்மானத்தினால் சுமார் 118,000 ஓய்வூதியர்கள் பாதிக்கப்பட்டனர். இதனை பெற்றுக்கொள்வதற்காக கடந்த ஐந்து வருடமாக பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் அவை கைகூடவில்லை.

இது தொடர்பாக பிரதி தொழில் அமைச்சர் மஹிந்த ஜயசிங்கவும் அண்மையில் 2016-2019 கால ஓய்வூதியர்களின் ஓய்வூதிய அதிகரிப்பை 2025 வரவு செலவுத் திட்டம் மூலம் அரசு வழங்குமென அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பரிசில் வழங்குவதாகக் கூறி பல இலட்சம் ரூபா மோசடி

(புத்தளம் நிருபர்)

புத்தளம் பகுதியில் பொதுமக்களிடம் தொலைபேசி மூலம் தொடர்புகளைக் மேற்கொண்டு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுவதாக கூறி வங்கி கணக்கு அட்டையின் இரகசிய இலக்கத்தைப் பெற்று (OTP) பண மோசடியில் ஈடுபட்ட 6 இளைஞர்கள் நேற்று முன்தினம்(11) சனிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெறுமதியான பரிசில்கள் தருவதாக தொலைபேசியில் கூறி தம்மை ஏமாற்றி பண மோசடி செய்யப்பட்டதாக புத்தளம் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய, புத்தளம் பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்ததுடன், ஆறு இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 6 பேரும் புத்தளம், பாலாவி மற்றும் கரம்பை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 18 மற்றும் 22 வயதுக்குற்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 125,000 ரூபா பணம் மற்றும் 6 கையடக்கத் தொலைபேசிகள், 9 வங்கி அட்டைகள், சிம் அட்டைகள் என்பனவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் புத்தளம் பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அம்பாறை மாவட்டத்தில் அடை மழை; தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம்

(வி.சுகிர்தகுமார்)

அம்பாறை மாவட்டத்தில் நேற்று காலை முதல் பெய்துவரும் இடி மின்னலுடன் கூடிய கடும் மழையினால் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் பல வீதிகளும் தாழ் நிலப்பிரதேசங்களும் மீண்டும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தைப்பொங்கலை கொண்டாடுவதற்கு தயாரான தமிழ் மக்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அன்றாட தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சந்தையில் பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

மழை வீழ்ச்சி தொடர்ந்தால் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான வாய்ப்பும் உள்ளது.

இதேநேரம் கால்நடைகளின் நடமாட்டம் வீதிகளில் காணப்படுவதால் பாதசாரிகளும் வாகன ஓட்டுனர்களும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளனர். மழைக்காலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு முறையற்ற வடிகான் அமைப்பின்மையே காரணம் எனவும் பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர். ஆகவே எதிர்வரும் காலத்தில் ஆலையடிவேம்பு பிரதேசத்திற்கு முறையான வரைபடத்துடனான வடிகான்கள் அமைக்கப்படுவது அவசியம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## யாரைக் கேட்கிறாய் வரி...?

“வரி... வட்டி... கிஸ்தி... யாரைக் கேட்கிறாய் வரி”... பராசக்தி திரைப்படத்தில் சிவாஜி கணேசன் பேசிய உணர்ச்சி வரிகள் ஞாபகத்துக்கு வருகிறது.

இலங்கை அரசியலையும் வரிவிதிப்புகளையும் பார்க்கும்போது, கலைஞர் கருணாநிதியின் இந்த வரிகள் கொஞ்சம் உரமேற்று கின்றன.

சிகரெட், மதுபானம் மீதான கலால் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. மதுபானத்துக்கு ஆறு வீதமும் சிகரட்டுக்கு 20 வீத வரியும் அதிகரிப்பு செய்யப்படுவதாக நிதி அமைச்சு வர்த்தமானி மூலம் அறிவித்திருக்கிறது. இந்த வரி அதிகரிப்பு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பதோடு சிகரெட், மதுபானங்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற நிலையில், சிகரெட், மதுபானங்கள் மீது வரி அதிகரிப்பு செய்யப்பட்டு இருப்பது மாற்றத்தை எதிர்பார்க்கும் மக்கள் மத்தியிலே ஏக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த அதிகரிப்பின் மூலம் வரவு-செலவுத் திட்டத்தில் வருகின்ற துண்டு விழும் தொகையை ஓரளவு ஈடு செய்ய முடியும் என்று அரசு நினைக்கிறது.

சிகரெட்டுகள் மீதான வரி வருமானத்தின் மூலம் 140 பில்லியன் ரூபாய் அதிகரித்த வருவாவை பெற முடியும் என்ற எதிர்பார்ப்புடன் அரசு இந்த நடவடிக்கை எடுத்திருக்கிறது. எவ்வாறாயினும், சிகரெட் வரியில் 20 வீத அதிகரிப்பினால் அரசாங்கத்தின் வருமான இலக்கை எட்ட முடியாது என்பது தெளிவு.

உண்மையில், துண்டு விழும் தொகையை ஈடு செய்யக்கூடிய வருமானத்தை அரசு ஈட்ட வேண்டுமாக இருந்தால், கலால் வரிகளில் 147 வீத அதிகரிப்பு செய்யப்பட வேண்டுமென பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

புதிய இடதுசாரி அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. அதற்கு முன்னர் சிகரெட், மதுபானங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. காலம் காலமாக ஆட்சியில் இருந்த அரசுகள் செய்த அதே வழிமுறைகளைத் தான் இந்த அரசும் செய்கிறது என்பது தெளிவாக தெரிகிறது.

பட்ஜெட் என்றாலே விலை அதிகரிப்பும், விலைக் குறைப்பும், சலுகைகளும்தான் மக்களின் எதிர்பார்ப்பு. அதிகரிப்புகளை எல்லாம் பட்ஜெட்டுக்கு முன்னரே அறிவித்துவிட்டு வரவு - செலவுத் திட்ட வாசிப்பின் போது, விலை குறைப்புக்களையும் சலுகைகளையும் அறிவிப்பது தான், கடந்த கால அரசுகளின் வழமையான செயல்பாடு.

சிகரெட், மதுபானங்களின் விலைகளில் அதிகரிப்பு செய்கின்ற பொழுது மகிழ்ச்சி தெரிவிப்பவர்கள் ஏராளம். இன்னும் ஒரு சாரார் அதிர்ச்சியில் ஏங்கிப் போய்விடுகிறார்கள் என்பது நமக்கெல்லாம் புரிவதில்லை. வரியை அதிகரித்து விட்டால் சிகரெட் பிடிப்பவர்களும் மதுபானம் அருந்துபவர்களும் பாவனையை நிறுத்தி விடுவார்கள் என்பது பெரும்பாலானோரின் எதிர்பார்ப்பு. அப்படி நடந்ததாக வரலாறு பேசவில்லை. குடிப்பவர்கள் குடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆய்வு தகவல் படி, பாவனைகளில் ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தாலும், விலை அதிகரிப்பு செய்கின்ற போதெல்லாம் பாவனையில் வீழ்ச்சி ஏற்பட்டதாக இல்லை.

சிகரெட், மதுபானங்களின் கலால் வரி அதிகரிப்பு யாரைப் பாதிக்கும் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. சிகரெட், மதுபானம் குடிப்பழக்கத்துக்கு அடிமைப்பட்டு போன அல்லது பழக்கப்பட்டு போனவர்கள் அதிகரிக்கும் விலையை ஈடு செய்து பயன்பெறுபவர்களாக இருக்கப் போவதில்லை. இதன் பாவனைக்கு அடிமைப்பட்டு போனவர்கள் எல்லாம் வாழ்க்கை தரத்தின் அடிமட்டத்தில் இருப்பவர்கள் என்பதை யார் புரிந்து கொள்வார்....?

குடித்தவன் குடித்துக் கொண்டுதான் இருக்கப் போகிறான். விலை அதிகரித்து விட்டது என்பதற்காக, அவன் நிறுத்தப் போவதும் இல்லை: ஒதுங்கப் போவதுமில்லை. மாறாக, மாற்று வழியை நாடுகின்ற அவல நிலைதான் அவர்களது அடுத்த தெரிவாக (Option) இருக்கும்.

சட்டவிரோத உற்பத்திகளை அவர்கள் நாடி செல்கின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டே ஆகும். கள்ளச்சாராயம் என்று அழைக்கப்படுகின்ற கசிப்பு, கஞ்சா, பீடி, சுருட்டு போன்றவற்றின் பாவனை அதிகரிப்பதோடு, சட்டவிரோத உற்பத்திகளும் அதிகரிக்கும் என்பதை அரசாங்கம் தெரிந்தும் தெரியாமல் இருக்கிறது.

ஆகவே, சிகரெட், மதுபானம் மீதான வரி அதிகரிப்பு நாட்டில் பெரும் சமூகச் சீரழிவுக்கு வித்திடப் போகிறது. சட்டவிரோத மதுபான உற்பத்திகளும், வன்முறை கலாசாரமும், கொலை, கொள்ளைகளுக்கான திறவுகோலாகவும் இந்த வரி விதிப்பு இருக்கும் என்பதை நாம் சுட்டிக் காட்டுகின்றோம்.

வரி விதிப்பு முறைமை நாட்டுக்கு அவசியமானது. இதில் மாற்று கருத்து இருக்கப் போவதில்லை. ஆனால், அது சமூகச் சீரழிவுகளை தூண்டாத வகையில் ஏற்படுத்தப்பட வேண்டும். வரி விதிப்பு மூலம் வருவாயை பெறுகின்ற அரசு, வன்முறைகளையும் சமூக சீரழிவுகளையும் கட்டுப்படுத்துவதற்காக அந்த நிதியை (வருவாயில் ஒரு பகுதியை) பயன்படுத்துகிறது என்றால் வரி விதிப்பில் அர்த்தமில்லை.

வரிவிதிப்புமுறையில் காலத்திற்கேற்ற புதிய பொறிமுறைகளைக் கண்டறிந்து அமுல்படுத்துவது தான் ஆரோக்கியமாக இருக்கும்.

சிகரெட், மதுபான விலைகளின் அதிகரிப்புக்கு எதிராக குரல் கொடுத்து வந்த ஜேவிபி தலைமையிலான இந்த இடதுசாரி அரசாங்கம், மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு பதிலாக கடந்த கால வழிமுறை அரசியலையே இவர்களும் பின்பற்றுகிறார்கள் என்றால் மக்களின் ஆணைக்கு என்ன நடந்தது...?

முறைமை மாற்றம் தான் இலக்கு என்றால், ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற நிதியமைச்சு ஏன் சிகரெட், மதுபானங் களின் விலைகளை அதிகரித்தன? மக்கள் எழுப்புகின்ற இந்த கேள்விக்கு பதிலளித்து சமாளிப்பதை விடவும், இடதுசாரி சிந்தனையை நடைமுறைப்படுத்துவது யதார்த்தமாக அமையும்.






# அந்தனி ஜீவா

## ஈழத்து - மலையக கலை இலக்கியத்துறையில் இன்றியமையாத படைப்பாளி

இலங்கையின் கலை இலக்கியத்துறையில் இன்றியமையாத ஒருவராக திகழ்ந்த அந்தனி ஜீவாவின் மறைவு இலக்கிய உலகில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது எனலாம். குறிப்பாக ஈழத்து கலை இலக்கியத் துறையில் அவர் ஆற்றியுள்ள பங்களிப்பு காலத்தால் மறையாத ஒன்றாகவே அமைந்துள்ளது.

கலையையும் இலக்கியத்தையும் சமூக விழிப்புணர்வுக்கான பணியாக நினைத்து இயங்கியவர் மறைந்த அந்தனி ஜீவா. எழுத்தாளர், நாடக ஆசிரியர், நாடகக் கலைஞர், நாடக இயக்குநர், தொழிற்சங்க செயற்பாட்டாளர், இதழியலாளர், பதிப்பாளர், சிறுகதை ஆசிரியர், முற்போக்குச் சிந்தனையாளர் எனப் பன்முக ஆளுமை படைத்தவராகவும் இவர் திகழ்ந்தார்.

மலையக எழுத்தாளரான அந்தனி ஜீவா கொழுந்து பத்திரிகையின் ஆசிரியராக இருந்து மலையக இலக்கியத்துக்கு வளம் சேர்த்துள்ளார். ‘கொழுந்து’ சஞ்சிகையை 31 ஆவது இதழ் வரை 20 இற்கும் மேற்பட்ட வருடங்கள் தனி ஒருவராக இருந்து வெளியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. நாடகத் துறையில் முக்கிய பங்காற்றிய இவர், மலையக மக்களின் எழுத்துக்களை பதிப்பிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டார். ‘ஜீவநதி’ இதழில் ” ஒரு வானம்பாடியின் கதை” எனும் தலைப்பில் தனது அனுபவத்தினை தொடராக எழுதினார்.

கொழும்பில் பிறந்து மலையகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தனி ஜீவா கொழும்பு சுவர்ண வீதியிலிருந்த தமிழ்ப் பாடசாலையிலும் பம்பலப்பிட்டி புனித மரியாள் கல்லூரியிலும் கல்வி கற்றார்.




1960 களில் எழுத ஆரம்பித்த இவர் கண்டியூர் கண்ணன், மாத்தளை கௌதமன், கவிதா ஆகிய புனைபெயர்களிலும் எழுதியுள்ளார். தினகரன், சுதந்திரன், மாணவன், தமிழருவி, திருமகன், கலைமலர், மாணவமலர், மாலைமுரசு, ஈழநாடு, சிந்தாமணி, சிரித்திரன், அமுதம், தேசபக்தன், நவமணி உள்ளிட்ட பல்வேறு இதழ்களில் கட்டுரைகள், சிறுகதைகள் எழுதி அவற்றிற்கான வரவேற்பையும் பெற்றுள்ளார்.

நாடகத்துறையில் முக்கிய பங்களித்த இவர் எழுதிய முதல் நாடகமான “முள்ளில் ரோஜா” 1970 இல் மேடையேறியது. 1970 களில் தொழிலாளர் வர்க்கப் பிரச்சினைகளைக் கருப்பொருளாகக் கொண்ட அக்கினிப்பூக்கள், வீணை அழுகின்றது முதலான நாடகங்களையும் உருவாக்கினார்.

மலையக இலக்கியங்களையும், எழுத்தாளர்களையும் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் என்ற பெருமையும் அந்தனி ஜீவாவுக்கு உண்டு. மலையகத்தில் தமிழையும், கலையையும் வளர்த்த பன்னிருவர் குறித்த தகவல்கள் அடங்கிய “மலையக மாணிக்கங்கள்’ என்னும் நூலை 1998 ஆம் ஆண்டு

> **எளிமையும் அன்பும் கருத்துப் பரிமாறல்களும் மிக்க இலக்கிய செயற்பாட்டாளரான மறைந்த அந்தனி ஜீவா அவர்கள் ஈழத்துக் கலை இலக்கியதில் இன்றியமையாத ஒருவராகத் திகழ்ந்துள்ளார்**

கொழும்பு துரைவி வெளியீடாகக் கொண்டு வந்துள்ளார்.

கொழுந்து, குன்றின் குரல் சஞ்சிகைகளின் ஆசிரியராகவும், லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் வெளியிட்ட ஜனசக்தி என்ற மாத இதழின் ஆசிரியராகவும் இருந்து பங்காற்றிய அந்தனி ஜீவா இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி 31.10.1984 அன்று சுட்டுக்கொல்லப்பட்டதன் எதிரொலியாக “அன்னை இந்திரா” எனும் தலைப்பில் தொடராக எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு பின்நாளில் நூலாகவும் வெளிவந்தது.

ஈழத்தில் தமிழ் நாடகம் (1981), அன்னை இந்திரா (1985), காந்தி நடேசையர் (1990), மலையகமும் இலக்கியமும் (1995), முகமும் முகவரியும் (1997), மலையக மாணிக்கங்கள் (1998), அக்கினிப் பூக்கள் (1999), சி. வி. சில நினைவுகள் (2002) குறிஞ்சிக் குயில்கள் (2002), மலையகத் தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு (2002), மலையகம் வளர்த்த கவிதை (2002), கண்டி மாவட்டத் தமிழர்களின் வரலாற்றுப் பதிவுகள் (2002), திருந்திய அசோகன் (2003), நெஞ்சில் பதிந்த ஐரோப்பிய பயணம் (2003), மலையகத் தொழிற்சங்க வரலாறு (2005), சிறகு விரிந்த காலம் (2007), ஒரு வானம்பாடியின் கதை (2014) போன்ற நூல்களை அந்தனி ஜீவா எழுதியுள்ளார். மலையக பெண்களின் எழுத்துக்களை தொகுத்து குறிஞ்சி மலர்கள் (சிறுகதைகள், 2000), குறிஞ்சிக் குயில்கள் (கவிதைகள், 2002), அம்மா(சிறுகதைகள், 2004) போன்ற தொகுப்புக்களையும் வெளியிட்டுள்ளார். அத்துடன் இவர் அரச சாகித்திய விருது, அரச இலக்கிய விருதுகளைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மலையகத்தின் 21 பெண் கவிஞர்களின் கவிதைகளை தொகுத்து ‘குறிஞ்சிக்குயில்கள்“ என்னும் நூலினை 2002 ஆம் ஆண்டு உலக மகளிர் தினத்தினை முன்னிட்டு வெளிக்கொணர்ந்தார். ‘அம்மா“ என்ற தலைப்பில் 25 இலங்கை பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளை தொகுத்து, சென்னை கலைஞன் பதிப்பகத்தின் மூலம் கொண்டு வந்ததுடன் பெண் படைப்பாளிகளை கொழுந்து இதழ்களில் அறிமுகப்படுத்தியவர் எனும் பெருமையும் அந்தனி ஜீவாவுக்கு உண்டு.

மலையகத்தில் 1980 களில் வீதி நாடகங்களை முதன் முதலில் அறிமுகப்படுத்திய அந்தனி ஜீவா பல நாடகங்களை மேடையேற்றியும் உள்ளார். எளிமையும் அன்பும் கருத்துப் பரிமாறல்களும் மிக்க இலக்கிய செயற்பாட்டாளரான மறைந்த அந்தனி ஜீவா அவர்கள் ஈழத்துக் கலை இலக்கியதில் இன்றியமையாத ஒருவராகத் திகழ்ந்துள்ளார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இத்தனை சிறப்புக்களுடன் ஈழத்து கலை இலக்கியத்துறைக்கு அரும்பணியாற்றிய அந்தனி ஜீவாவின் ஆத்மா சாந்தி அடைவதாக. ■



## "பழையன கழிதலும்... புதியன புகுதலும்"...

# இன்று போகிப் பண்டிகை

## புதிய பயணத்துக்கு தயாராகும் நாள்

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் இந்தியாவில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. குறிப்பாக நான்கு நாட்கள் தைப்பொங்கல் பண்டிகையை கொண்டாடுகின்றனர். அந்த வகையில், பொங்கலுக்கு முதல் நாள் போகி பண்டிகை கொண்டாடப் படுகின்றது.

மார்கழி மாதத்தின் நிறைவு நாளில் போகி கொண்டாடப்படும். "பழையன கழிதலும்... புதியன புகுதலும்" என்பதே இப்பண் டிகையின் நோக்கமாகும்.

சூரிய பகவான் தன்னுடைய பயணத்தை தெற்கில் இருந்து வடக்கில் துவக்கும் நாளையே மகர சங்கராந்தி என்கிறோம். பழைய தீய விடயங்களை விடுத்து, வாழ்க்கையில் புதிய பயணத்தை துவங்க வேண்டும் என்பதை உணர்த்தும் நாளே போகிப் பண்டிகையாகும். வீட்டில் செல்வ வளம், மாற்றம், வளர்ச்சி ஆகியவை புதிதாக நிறைய வேண்டும் என்பதற்காக வீடுகளை சுத்தம் செய்து, புதிய பயணத்திற்கு தயாராகும் நாள் போகி பண்டிகை யாகும்.



### யாரை வழிபட வேண்டும்?

போகி என்பது மழையின் கடவுளான இந்திரனை வழிபடுவதற்குரிய நாள் என இந்து சாஸ்திரங்கள் சொல்கின்றன. இந்த நாளில் விவசாயிகள், தங்களின் விவசாயம் செழிக்க நல்ல மழையை அருள வேண்டும் என வேண்டிக் கொள்வது வழக்கம். ஆண்டு முழுவதும் செழிப்பாக இருக்க, செல்வ வளங்களை நிறைவதற்கு இந்திரன் அருள் செய்யும் நாள் என நம்பப்படுகிறது. இது இந்திர னுக்கு மிகவும் பிடித்தமான நாளாக சொல்லப்படுகிறது. இயற்கைக்கு நன்றி செலுத்தி, அவற்றின் ஆசியை பெறும் நாளாக போகி பண்டிகையை கொண்டாட வேண்டும்.

### போகி கொண்டாட்ட முறைகள்

இந்தியாவில் பல மாநிலங்களில் பல விதமான பெயர்களில் போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது. தென்னிந்தியாவில் போகி என்ற பெயரிலும், பஞ்சாப் உள்ளிட்ட வட மாநிலங்களில் லோஹ்றி என்ற பெயரிலும் அசாமில் மகி பிரு அல்லது போகாலி பிரு என்ற பெயரிலும் கொண்டாடப்படுகிறது. வேறு வேறு பெயர்களில் கொண்டா டினாலும் இது கொண்டாடப்படும் விதம் ஒன்றாக தான் இருக்கும். அனைவரும் விவசாயம் செழிக்க வேண்டும் என வேண்டிக் கொள்ளும் நாளாகவே போகி கொண்டாடப்படுகிறது.

### போகியில் செய்ய வேண்டியது

போகி பண்டிகை அன்று வீட்டை சுத்தம் செய்து, வெள்ளை அடித்து, அழகிய மலர்கள் மாவிலைகள் ஆகியவற்றால் அலங்கரிக்க வேண்டும். புதிதாக விளைந்த அரிசியில் அரைத்த மாவை பயன்படுத்தி மாக்கோலமிட்டு, கோலத்திற்கு நடுவே மாட்டுச் சாணம் பிடித்து வைத்து, அவற்றில் பூசணிப்பூவை வைக்க வேண்டும். விவசாயிகள் தங்களின் விவசாய பணிகளுக்கு பயன்படுத்தும் ஏர் கலப்பை போன்றவற்றிற்கு சந்தனம், குங்குமம் தொட்டு வைத்து வணங்க வேண்டும். சூரிய பகவானையும், பூமி தேவியையும் வணங்கி விட்டு, விவசாய பணிகளை துவக்க வேண்டும். விவசாயத்திற்கு பயன்படுத்தும் பொருட்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும்.

### போகி சடங்குகள்

சில பகுதிகளில் தீ மூட்டி தேவையற்ற பொருட்களையும், ஆடைகளையும் எரிப்பார்கள். பெண்கள் மந்திரங்கள் சொல்லியும், பாடல்கள் பாடியும் அந்த தீயை சுற்றி வந்து வழிபடுவார்கள். நண்பர்கள், குடும்பங்கள் ஆகியவை ஒன்றி




ணையும் நாளாக போகி பண்டிகை இருக்கும். புதிதாக விளைந்த அரிசி, பழங்கள், விளைச்சல் மூலமாக கிடைத்த பணம் ஆகியவற்றை மற்றவர்களுக்கு பகிர்ந்து அளித்து போகியை கொண்டாடும் வழக்கமும் சில இடங்களில் உள்ளது. பட்டம் விடுவது, பாரம்பரிய விளையாட்டு போட்டிகள் நடத்துவது ஆகியனவும் சில இடங்களில் வழக்கமாக உள்ளது. அனைவருடனும் பகை, கோபங்களை மறந்து ஒன்று கூடி, மகிழ்ச்சியாக ஒற்றுமையுடன் போகி பண்டிகையை கொண்டாடலாம்.

# 500 இந்திய உழவு இயந்திரங்கள் எவ்வித பயன்பாடுமற்ற நிலையில்



(ஜதுர்சிகா)

வடக்கு மாகாணத்திலுள்ள 52 கமநல சேவை நிலையங்களுக்காக இந்திய அரசின் நன்கொடையின் கீழ் வழங்கப்பட்ட ஐந்நூறு உழவு இயந்திரங்கள் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக எந்தவித பயன்பாடுகளுமின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். இவற்றை விவசாயிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கி வைக்குமாறும் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

வடக்கு மாகானத்திகுட்பட்ட வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு விவசாய சேவை மையங்களில் வடக்கு ஆளுநரின் வழிகாட்டுத லின் கீழ் இந்திய அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்டவை யாகும். விவசாயிகள் இலவசமாக அல்லது தவணை அடிப்படையில் குறித்த உழவு இயந்திரங்களைக் கோரினர், ஆனால் அரசாங்கம் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

முறையாகப் பயன்படுத் தப்படாமலும் பராமரிக்கப்படாமலும் குறித்த உழவு இயந்திரங்களின் மதிப்பு ஆண்டுதோறும் குறைந்து வருகின்றன.

அத்துடன் மாகாண சபையால் உழவு இயந்திரங்களின் உரிமை விவசாய சேவை மையங்களுக்கு மாற்றப்படவில்லை.

வடக்கு மாகாணத்திலுள்ள 52 கமநல சேவை நிலையங்க ளில் எந்தவித பழுதும் இல்லாமல் பயன்படுத்தாமல் வருடக்கணக் காகக் கிடந்து உக்கும் ஐந்நூறு (500) உழவு இயந்திரங்களை இவற்றைப் பயன்படுத்த வேண்டும் அல்லது விவசாயிகளின் தேவை களுக்காக ஒப்பந்த அடிப்படையில் அல்லது கடன் அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் விற்பனை செய்து விட்டு பணத்தினை வேறு தேவை களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் தெரி கின்றனர்.

# உளுந்துக்கு உரிய விலை கிடைக்கவில்லை

## பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி மாலினி முரளிதரன்

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்டத்தில் அறு வடை செய்யப்படும் உளுந்துக்கு உரிய விலை கிடைக்கவில்லை எனப் பிரதி விவசாயப் பணிப் பாளர் திருமதி மாலினி முரளி தரன் தெரிவித்துள்ளார்.

உளுந்து அறுவடை தொடர்பில் நேற்று (12) கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

2024 - 2025 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பெரும் போகத்தில் 5650 ஹெக்டேயர் அளவில் வவுனியா மாவட்டத்தில் உளுந்து செய்கை பண்ணப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் விவசாயிகள் தற்போது உளுந்து அறுவடையை மேற்கொள்கிறார்கள். அவர்க ளுக்கு தற்போது உரியவிலை கிடைக்கவில்லை என்பது குறை யாகவுள்ளது. அறுவடைக் காலத் தில் விற்பனைக்குக் கொண்டு செல்லும் போது விலை குறைவாகத் தான் இருக்கும். உளுந்தைப் பத்தி ரமாக வண்டு மற்றும் பூச்சி தாக்கம் இல்லாது பாதுகாக்க வேண்டும்.

விலை அதிகரிக்கும் காலங்களில் அதனை விற்பனை செய்ய வேண்டும். காற்று புகாவண்ணம் 300 கேச் தடிப்புள்ள பொலித்தீனில் பொதி செய்து வைத்திருக்க முடியும். அல்லது 5 லீற்றர் குடிநீர் வரும் போத்தலில் கூட உளுந்தைப் போட்டுப் பாதுகாப்பாக மூடி வைக்க முடியும். அரசாங்கம் உளுந்திற்கான விலை தொடர் பில் கவனம் செலுத்தி வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# திறக்கப்படாத ஆயுர்வேத வைத்தியசாலை



(ஜதுர்சிகா)

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் பல மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலை கட்டடம் இன்று வரை திறந்து வைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் உப அலுவலகத்தின் கீழ் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலை யினை தருமபுரம் பகுதியில் இயங்க வைப்பதற்காக கரைச்சி பிரதேச சபையி னால் தருமபுரத்தில் நிர்மாணிக் கப்பட்ட ஆயுர்வேத வைத்தி யசாலை கட்டடத்தின் கட்டு மான பணிகள் நிறைவு பெற்று பல ஆண்டுகள் ஆகிய போதும் திறந்து வைக்கப்படவில்லை.

இந்தக் கட்டடம் தற்போது கால் நடைகளின் உறைவிட மாகவும் காணப்படுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# உள்ளூராட்சி சபைகளின் வருமானத்தை மக்களின் மேம்பாட்டுக்காகச் செலவு

## செய்ய வேண்டும்: வடக்கு ஆளுநர்



(ஆ.நரேன்)

உள்ளூராட்சி மன்றங்கள் பெற்றுக்கொள்ளும் வருமானங் களை தமது பிரதேச மக்களின் வாழ்வாதாரம் உள்ளிட்ட ஏனைய மேம்பாடுகளுக்குச் செலவு செய்ய வேண்டும். அதை விடுத்து அதனை நிரந்தர வைப்பிலிட்டு சேர்த்து வைத்துக் கொண்டிருக்கக்கூடாது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பருத்தித் துறை மரக்கறி பொதுச் சந்தை கடந்த வெள்ளிக்கிழமை (10) திறந்து வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், உள்ளூர் அபி விருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 45 மில்லியன் ரூபா செலவில் இந்தச் சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர் தொடர்ந்து தனது உரையில்,

பௌதீக வளங்களின் முன் னேற்றம் என்பது அபிவிருத்திக்கு இன்றியமையாதது. அதேபோன்று தனித்து பௌதீக வளங்களின் முன்னேற்றம் மாத்திரமும் அபி விருத்தி யாகிவிடாது. எங்களின் சேவையை மேம்படுத்தும் போது தான் அபிவிருத்தி முழுமையடை யும். எனவே மக்களுக்குத் தரமான, அன்பான, விரைவான சேவையை வழங்க முன்வர வேண்டும் என்றார்.

# வவுனியாவில் விவேகானந்தரின் பிறந்த தினம் அனுஷ்டிப்பு

(கி.வசந்தன்)

சுவாமி விவேகானந்தரின் 162 ஆவது பிறந்த தின நிகழ்வு வவுனியா புகையிரத நிலைய வீதிலுள்ள நினைவுத் தூபியில் நேற்று (12) காலை நடைபெற்றது.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் மற்றும் வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவரது சிலைக்கு, மலர் மாலை அணிவித்து, மலர்தூவி நினைவு கூரப்பட்டது. அவர் தொடர்பான நினைவுரைகளை தமிழ்மணி அகளங்கன் மற்றும் மாணவர்கள் வழங்கியிருந்தனர்.



# யாழ் இருபாலையில் கிராமிய விளையாட்டு நிகழ்வு

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ் இருபாலை வன் னிய சிங்கம் சனசமூக நிலையத் தின் ஏற்பாட்டில் கிராமிய விளை யாட்டு நிகழ்வு எதிர்வரும் செவ் வாய்க்கிழமை (14) மாலை 3 மணி யளவில் சனசமூக நிலைய மைதா னத் தில் இடம்பெறவுள்ளது.

கிராமிய விளையாட்டு நிகழ் வுகளாக கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், கிடுகு பின்னுதல், யானைக்கு கண்வைத்தல், தேங் காய் திருவுதல் உள்ளிட்ட பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொங்கலோ பொங்கல்: தமிழர் திருநாள்

# தைப்பொங்கல்.....!





கி.வசந்தரூபன்

இலங்கையின் புதிய அரசியல் மாற்றங்களுடன் 2025 ஆம் ஆண்டு மலர்ந்திருக்கின்றது. வருடத்தின் முதல் மாதத்தில் கால் பதித்துள்ளோம். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். தமிழ் மாதங்களில் தனிச் சிறப்பு வாய்ந்த மாதமாக தை மாதம் விளங்குகின்றது. தை மாதத்தின் பிறப்பை அறுவடைத் திருநாளாக, பொங்கல் தினமாக உலகத் தமிழினம் கொண்டாடி வருகிறது. தமிழ்ப் புத்தாண்டின் முதல் நாளாகவும் இந்த நாள் ஆரம்பத்தில் கொண்டாடப்பட்டது.

தமிழர்களின் கலாசார பண்பாட்டு விழாக்களில் தைத்திருநாள் என்பது முக்கியமான ஒரு விழாவாகும். தைப்பொங்கல் என்பது தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு தனிப்பெரும் விழா. மகரத்திருநாளாக தமிழர்களால் தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், கனடா, அவுஸ்ரேலியா, பிரித்தானியா, பிரான்ஸ், சுவிஸ், அமெரிக்கா, பெல்ஜியம் என தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. மலேசியா, இலங்கை, இந்தியா உள்ளிட்ட சில நாடுகளில் பொங்கல் பண்டிகையன்று அரசாங்க விடுமுறையும் உள்ளது.

மதங்களைக் கடந்து அதிகமான தமிழ் மக்களால் இது கொண்டாடப்படுகிறது. விவசாயிகள், தொழிலாளர்கள் இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக சூரிய உதயத்தின் போது வீட்டு முற்றத்தில் புதிய அடுப்பு வைத்து, புதிய பானையில் புத்தரிசியிட்டு பொங்கி சூரியபகவானுக்கு படைத்து வழிபடுகின்ற நாள் ஆகும். தமிழர் திருநாள் தைப் பொங்கல், அறுவடைத் திருநாள் என கூறப்படும் பொங்கல் பண்டிகை தமிழர் பண்டிகை ஆகும். பொங்கல் என்பதற்கு சாப்பிடும் பொங்கல் என்று பொருள் அல்ல. பொங்கிப் பெருகி வருவது என்று பொருள்.

பொங்கல் பண்டிகையின் தோற்றம் எப்போது என்று உறுதியாகத் தெரியவில்லை. இந்திர விழா என்ற பெயரில் நல்ல மழை பொழியவும், நாடு செழிக்கவும் இந்திரனை ஆயர்கள் வழிபட்டு வந்தனர். ஆயர்கள் பக்தியோடும் பயத்தோடும் இந்திரனை வழிபட்டனர். ஆனால், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் அறிவுரைப்படி ஆயர்களுக்கும், அவர்தம் ஆநிரைகளுக்கும் வளங்கள் தருகின்ற கோவர்த்தன மலைக்கு





ஆயர்கள் மரியாதை செய்தனர். இதனால் கோபமுற்ற இந்திரன் புயலாலும், மழையாலும் ஆயர்களை துன்புறுத்தினான். கோவர்த்தன மலையை குடையாய் பிடித்து இந்திரனிடமிருந்து ஆயர்களையும் அவர் தம் ஆநிரைகளையும் ஸ்ரீ கிருஷ்ணர் காத்தருளினார். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கோவர்த்தன மலையை குடையாய் பிடித்து இந்திரனிடமிருந்து ஆயர்களையும் அவர் தம் ஆநிரைகளையும் காத்த நாளே சூரிய நாராயண பூஜையாகும். இந்திரன் தன் தவறை உணர்ந்து கண்ணனிடம் தன்னையும் மக்கள் வழிபட வேண்டும் என்று வேண்டிக் கொண்டதால் தைப் பொங்கலுக்கு முதல்நாள் இந்திர வழிபாடை (போகி பண்டிகை) ஆயர்கள் கொண்டாடினர்.

தை முதல் நாள் சூரியபகவானை சூரியநாராயணராக பாவித்து வழிபட்டனர். அதன் மறுநாள் தங்களின் ஆநிரைகளுக்கு விழா (மாட்டுப்பொங்கல்) எடுத்து தங்களின் உணவுகளை அவைகளுக்கு படைத்தும், காளைகளுடன் விளையாடியும் (ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு) விழாவை கொண்டாடினர். இதுவே நாளடைவில் மூன்று தினங்கள் கொண்டாடும் பொங்கல் கொண்டாட்டமாக மாறியது எனக் கூறப்படுகிறது. சோழர் காலத்தில் பொங்கல் பண்டிகைக்கு புதியீடு என்று பெயர் இருந்தது. அதாவது, ஆண்டின் முதல் அறுவடை என்று அதற்குப் பொருள். உழவர்கள் தை மாதத்தின் முதல் நாளில், அந்த ஆண்டின் முதல் அறுவடையை மேற்கொள்வது வழக்கமாக இருந்தது. இதுதான் பின்னர் பொங்கல் பண்டிகையாக மாறியது என்கிறார்கள். பொங்கல் பண்டிகை மொத்தம் 3 நாட்களுக்கு கொண்டாடப்படுகிறது. முதல் நாள் போகி பண்டிகை. அடுத்த நாள் பொங்கலிடும் நாள். 3வது நாள் மாட்டுப் பொங்கல். நமக்கு காலமெல்லாம் கை கொடுத்து உதவும் மழை, சூரியன், விவசாயத்திற்குப் பயன்படும் கால்நடைகள் ஆகியவற்றுக்கு நன்றி கூறும் நல் வாய்ப்பாக இந்த திருநாள் கொண்டாடப்படுகிறது.

இந்தியாவில் இம் மூன்று தினங்களும் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆனால் இலங்கையில் தைப்பொங்கல் மற்றும் மாட்டுப் பொங்கல் ஆகிய இரு தினங்களும் சிறப்பாக கொண்டப்படட்டு வருகிறது.

இந்தியாவில் பொங்கல் திருநாளின் முதல் நிகழ்வான போகி பண்டிகையன்று அதிகாலையில் அனைவரும் எழுந்து குளித்து, வீட்டில் உள்ள தேவையற்ற, பழைய பொருட்களை வீட்டின் முன்பு வைத்து தீயிட்டு கொளுத்துவார்கள். அல்லவை அழிந்து நல்லவை வரட்டும். பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற மொழிக்கேற்ப போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது.

பொங்கல் தினம் தமிழர் வாழும் அனைத்து பகுதிகளிலும் விசேஷடமானது. தை மாதப் பிறப்பு நாள் இது. சர்க்கரைப் பொங்கல் என்று இந்த பண்டிகைக்குப் பெயர். புதுப்பானை எடுத்து, மஞ்சள் உள்ளிட்டவற்றை பானையைச் சுற்றிக் கட்டி, புதுப் பாலில், புது அரிசியிட்டு, வெல்லம் உள்ளிட்டவற்றைக் கலந்து பொங்கலிடுவார்கள். வீட்டுக்கு வெளியே சூரியன் இருக்கும் திசையை நோக்கி இந்த பொங்கலிடும் நிகழ்ச்சி நடைபெறும். அரிசி நன்கு சமைந்து, பொங்கி வரும்போது குலவையிட்டும், பொங்கலோ பொங்கல், பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக என்ற குரலோடு பொங்கல் பானையை இறக்க வேண்டும். நன்கு பொங்கி வந்தால் அந்த ஆண்டு முழுவதும் நல்ல வளமும், நலமும் நிலவும் என்பது ஐதீகம்.

மறுநாள் மாட்டுப் பொங்கல். கிராமங்கள் தோறும் மாட்டுப் பொங்கல் விமரிசையாக கொண்டாடப்படும். வீடுகள் புதுப் பூச்சு காணும். மாடுகள், பசுக்களின் கொம்புகளுக்கு புது வர்ணம் பூசி நன்கு குளிப்பாட்டி, அவற்றை அலங்காரம் செய்து மாட்டுப் பொங்கல் தினத்தின் போது படையலிட்டு வழிபாடு செய்வார்கள். பின்னர் மாடுகளுக்கு பொங்கலும் வழங்கப்படும். ஆண்டெல்லாம் நமக்காக உழைக்கும் மாடுகளுக்கு நன்றி கூறும் தினமாக இது கொண்டாடப்படுகிறது. இந்த தினத்தின் போது மாடுகளுக்கு ஒரு வேலையும் வழங்கமாட்டார்கள். கழுத்தில் புது மணி கட்டி, கொம்புகளை சீவி விட்டு சுதந்திரமாக திரிய விடுவார்கள். இதன்போது இந்தியாவில் ஜல்லிக்கட்டு நிகழ்வும் இடம்பெறுவது வழக்கம்.

இப்படியாக பொங்கல் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இதுதவிர, நான்காவது நாள் காணும் பொங்கலாக இந்தியாவின் வட மாவட்டங்களில் கொண்டாடப்படுகிறது. அதாவது உற்றார், உறவினர், நண்பர்களைக் கண்டு வாழ்த்துக்களையும் இனிப்புகளையும் பரிமாறிக் கொள்ளும் நாளாக இது கொண்டாடப்படுகிறது. சுற்றுலாத் தளங்களுக்கும், பொழுது போக்குமிடங்களுக்கும் இந்த நாளில் போவது வழக்கம். கன்னியாகுமரி மாவட்டத்தில் கனி காணும் நாளாக இது கொண்டாடப்படுகிறது.

பொங்கல் பண்டிகையின் முக்கிய அம்சங்களாக கரும்பு, இனிப்புப் பொங்கல் என்பன விளங்குகின்றது. இவை இல்லாமல் பொங்கல் நிறைவடையாது. கரும்புகளுக்கு பொங்கல் பண்டிகையின் போது தான் கிராக்கி. வியாபாரமும் களை கட்டும். இவ்வாறாக இந்த பொங்கல் பண்டிகை உழவர்கள், வியாபாரிகள், தொழிலாளர்கள் எல்லோருக்கும் ஒரு விசேடமான பண்டிகையே.

அந்தவகையில் 2025 ஆம் ஆண்டின் பொங்கல் தினம் இன்றாகும். இம்முறை பொங்கல் வியாபாரமும் வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட தமிழர் பகுதிகளில் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. இதனால் பட்ட துன்பங்கள் மறைந்து புதிய ஆண்டில் புதிய ஜனாதிபதியின் கீழ் தமிழ் மக்களது அபிலாசைகளுக்கும், அடிப்படை பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் ஓர் ஆண்டாகவும், பொருளாதார வளம் கொழிக்கும் ஆண்டாகவும் இந்த ஆண்டு சிறக்க சூரியக் கடவுளை நினைந்து பொங்கி பிரார்த்திப்பதுடன், வெடிகொளுத்தியும், வாழ்த்துக்களை பரிமாறியும் நல்லிணக்கத்துடனும் தோழமையுடனும் ஒரு தாய் மக்களாக வாழ இந்த பொங்கல் பண்டிகையில் உறுதி பூணுவோம்.

# கடற்கரையோர சூழலை நாசம் பண்ணுதல் நாட்டுக்கே கேடு விளைவிக்கும்



ஏ.எச்.ஏ.ஹுஸைன்



சுற்றுச் சூழல் பாதுகாப்பை மேம்படுத்தி, பல்லுயிர்த்தன்மையைப் பாதுகாத்து, ஆரோக்கியத்தைப் பேணும் வகையிலமைந்த இயற்கையைத் தக்க வைத்துக் கொள்ளும் கூட்டிணைந்த நடவடிக்கை களை முன்னெடுத்து வருவதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் தங்கராஜா திலீப்குமார் தெரிவித்தார்.

வீ எபெக்ற் நிறுவனத்தின் நிதி அனுசரணையில், வாகரைப் பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புடன் இளைஞர் அபிவிருத்தி அகம் சல்லிமுனைப் கடற்கரையோரப் பிரதேசத்தில் மக்கள் பங்களிப்புடனான துப்புரவாக்கும் பணிகளில் ஈடுபட்டது. வாகரைப் பிரதேச சபை ஊழியர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம மட்ட கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள், கரையோர சமூக மக்கள், சுற்றுச் சூழல் நேய ஆர்வலர்கள், ஆகியோரின் பங்குபற்றுலுடன் கடற்கரையோ சுத்தமாக்கும் பணிகள் துவக்கி வைக்கப்பட்டன. விழிப்புணர்வூட்டும் இந்த கரையோர கழிவகற்றல் நிகழ்வுபற்றி கருத்துத் தெரிவித்த திலீப்குமார்,

கடற் கரையோர நீர்நிலைகள் மாசுபடுவதைத் தவிர்த்து மீன் வளத்தையும் இன்னபிற கடல்வாழ் உயிரினங்களையும் பாதுகாத்து உயிரினப் பல்வகை இயற்கை வழி இயங்கியலை தக்க வைத்துக் கொள்வதே இதன் நோக்கமாகும். மேலும், இதன் மூலம் சமூக மட்ட ஆதரவுடன் நிலைபேறான சமுதாய சுற்றுச் சூழல் அபிவிருத்தியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அக்கறையற்ற விதத்தில் கடற்கரையோரங்களில் உள்ள நீரேந்துப் பகுதிகளில் வீசப்படும் திண்மக் கழிவுகள், பிளாஸ்ரிக் கழிவுகள் அகியவை அப்பிரதேசங்களில் மட்டுமன்றி அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கடல் நீரினால் அது எங்கெங்கு அடித்துச் செல்லப்படுமோ அங்கெல்லாம் பல்லுயிர்த் தன்மைக்கும் கடல், வாவி வாழ் உயினங்களுக்கும், தாவரங்களுக்கும் மனிதர்களுக்கும் பெருத்த பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. மேலும், இதனால் நம் நாட்டுக்கு வருமானத்தை ஈட்டித் தரும் சுற்றுலாத் துறையும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. மனோரம்மியமான அழகிய இயற்கை எழில் கொஞ்சும் கடற்கரைப் பிரதேசங்கள் திண்ம, திரவக் கழிவுகளால் அசிங்கப்படுத்தப்படுவதால் சுற்றுலாப் பயணிகள் அப்பிரதேசங்களுக்குச் செல்ல சங்கடப்படுகிறார்கள். கழிவுகளை முறையற்ற விதத்தில் வீசுதல் பேரழிவு தரும் சுற்றுச்சூழல் பிரச்சினையாக தற்போது உருவெடுத்தள்ளது. இதனை குறைத்து காலப்போக்கில் சுற்றுச்சூழல் அழிவை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் பிரதேச மக்களின் முழுமையான விழிப்புணர்வுடன் கூடிய இந்த மக்கள் பங்களிப்புடனான வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. இயற்கைச் சூழலைப் பேணும் வகையில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனம், வருடாவருடம் தேசிய கடல்சார் வளங்களைப் பாதுகாக்கும் தேசிய வேலைத் திட்டம், சர்வதேச இடர் அபாயக் குறைப்பு தின வேலைத் திட்டம், உலக சூழல் தின அமுலாக்க வேலைத் திட்டம், ஆகியவற்றில் பங்களிப்புச் செய்தும் மக்களை விழிப்பூட்டியும் வருகிறது" என்றார். சல்லிமுனையில் இடம்பெற்ற விழிப்புணர்வூட்டல் கடற் கரையோர துப்புரவாக்கும் பணிகளில் பனிச்சங்கேணி கிராம அலுவலர் கே. மதிகரன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மாலதி விவேகானந்தன், வாகரைப் பிரதேச சபை ஊழியர்கள், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவன களப்பணி அலுவலர் ஏ. சஞ்ஜித் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### சாரதி அனுமதிப்பத்திரம், வாகனப் பதிவு புத்தகங்கள்

## போலியாகத் தயாரித்த மூவர் பொலன்னறுவையில் கைது

(எம்.ரீ.ஆரிப்)

போலியாக ஆவணங்களை தயாரித்து சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வாகனப் பதிவுப் புத்தகங்களை போலியாகத் தயாரித்த வேரஹெர பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய நபர் உட்பட மூவரை பொலன்னறுவை குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பொலன்னறுவை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற் கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது மனம்பிட்டி, வேரஹெர மற்றும் நாரஹேன்பிட்ட பகுதிகளைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 22 போலி சாரதி அனுமதி அட்டைகள், 06 கையடக்கத் தொலைபேசிகள், கணனி மற்றும் பல ஆவணங்களை கைப்பற்றியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# 23 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டில் ஒயா மடுவவில் தொழிற்பேட்டை ஆரம்பம்

( எம்.ரீ.ஆரிப் )

எண்பத்தைந்து ஏக்கர் நிலப் பரப்பில் அனைத்து வசதிகளுடன் கூடிய தொழிற்பேட்டையொன்று ஒயா மடுவ பகுதியில் நிர்மாணிக் கப்படுமென வர்த்தக உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு துறை அமைச்சர் வசந்த சமரசிங்க தெரி வித்தார்.

புதிய திட்டங்களை முன் னோக்கி ஒயா மடுவ பகுதியில் 'சுவ சிறிபுர' கைத்தொழில் வலயத்தில் நேற்றுமுன்தினம் மருந்து உற்பத்தி ஆலையை (11) ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே அமைச்சர் வசந்த சமரசிங்க இவ்வாறு தெரிவித்தார்.



நீயூ லைஃப் பயோடக் (தனியார்) நிறுவனம் இந்த புதிய மருந்து உற்பத்தி ஆலையை அறிமுகப்படுத்துகிறது.

இதற்காக 23 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்படும். இது மிகவும் பெறுமதியான நுண்ணுயிர் எதிர்ப்பி மருந்துகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாகும்.

இது உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐரோப்பிய தரநிலைக்கு ஏற்ப தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 2000 நேரடி தொழில் வாய்ப்புக்களும் ஐய்யாயிரம் மறைமுக வேலைவாய்ப்புக்களை யும் வழங்க திட்டமிடப்பட்டுள்ள தாக அமைச்சர் வசந்த சமரசிங்க மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் மருந்துத் தேவைகளின் நிதிப் பெறுமதி 120 மில்லியன் ரூபாவைத் தாண்டி யுள்ளது. அந்தத் தேவையில் சுமார் 20 வீதம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும். சர்வதேச சந்தைக்கு இது அனுப்பப்படும் என்பதால் இந்த ஏற்றுமதி நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டும் வாய்ப்பும் வழங்கப்படும்.

இலங்கையின் மருந்துத் தேவைகளின் நிதிப் பெறுமதி 120 மில்லியன் ரூபாவைத் தாண்டி யுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## மூளையிலுள்ள கட்டிகளை அடையாளம் காணும் இயந்திரம் கண்டுபிடிப்பு




(பாறுக் ஷிஹான்)

மூளையில் உள்ள கட்டிகளை அடையாளம் காண்பதற்கு வரதராஜன் டிலக்சனினால் புதிய இயந்திரமொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நிந்தவூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் காரைதீவு விபு லானந்த மத்திய கல்லூரியில் தொழில்நுட்ப பிரிவில் கல்வி பயின்று யாழ்ப்பாண பல்கலைக் கழக கல்லூரிக்கு சென்ற வரத ராஜன் டிலக்சனால், மூளையில் உள்ள கட்டிகளை அடையாளம் காணும் செயற்திட்டம் (The Brain Tumour Navigation System Project) வெற்றிகரமாக செயல்படுத் தப்பட்டது.

இவர் யாழ்ப்பாண பல்கலைக் கழக கல்லூரியின் (Mechatronic Engineering Technology) பிரிவின், இறுதி ஆண்டு மாணவராவார்.

## வருடாந்த உற்சவம்

(க.மகாதேவன்)

உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்திய பாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்ச வத்தில் ஞாயிற்றுக்கிழமை (12) காலை தீர்த்த உற்சவம் நடை பெற்றது. சுவாமி வீதி வலம் வந்ததுடன் ஸ்ரீ வீரபத்திரகாளிய ம்மன் ஆலய அருகில் உள்ள சமுத்திரத்தில் தீர்த்தம் நடைபெற் றது. இதில் பலநூற்றுக் கணக்கான அடியார்கள் கலந்து கொண்டு தீர்த்தமாடினர்.

## தைத்திருநாள் கோலப் போட்டி



*நாட்டிலுள்ள ஒன்பது மாகாணத்தையும் ஒன்றிணைக்கும் வண்ணம் தைத்திருநாள் கோலப் போட்டியொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை (12) உடப்பு இந்து கலாசார மண்டப முன் வாயிலில் இடம்பெற்றது. உடப்பு இந்து நெறிக்கழக ஆசிரியர் கள் மாணவர்கள் பங்கு பற்றலில் நடைபெற்றது.* **(படங்கள்: க.மகாதேவன்)**

### களுவாஞ்சிக்குடியில் களைகட்டிய

## தைப்பொங்கல் வியாபாரம்



(வெல்லாவெளி நிருபர்)

உழவர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி நகரில் அமைந்துள்ள பொதுச் சந்தையில் பொதுமக்கள் பொருட்களை கொள்வனவு செய்வதை நேற்று (12) அவதானிக்க முடிந்தது.

வர்த்தக நிலையங்களிலும், ஏனைய வியாபார ஸ்தலங்களிலும் வியாபாரம் களை கட்டிய நிலையில் மக்கள் புத்தாடைகளையும்

மண்பானை, மண்சட்டி மற்றும் வீட்டு பாவனை பொருட்களையும், பொங்கலுக்கான பொருட்களை கொள்வனவு செய்வதை காண முடிந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்புத் தெகுதியில் படுவான் கரைப் பிரதேசத்தையும், எழுவான் கரையையும் இணைக்கும் பிரதான நகரமாக களுவாஞ்சிக்குடி நகர் பிரதான வர்த்தக நிலையமாக விளங்குகிறமை குறிப்பிடத்தக்க தாகும்.

## காட்டு யானைகளால் அச்சத்துக்குள்ளாகும் கிராம மக்கள்

(எம்.ரீ.ஆரிப்)

அநுராதபுரம் தலாவ, மொரகொட மற்றும் ஹிங்குருவெவ ஆகிய கிராமங்களுக்குள் காட்டு யானைகள் கூட்டம் கூட்டமாக உள்நுழைவதால் கிராம மக்கள் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருவதாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

இந்த காட்டு யானைகள் இரவு தெருக்களில் கிராமங்களுக்குள் உள்நுழைந்து பல்வேறு சேதங்களை ஏற்படுத்தி வருவதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முகநூல் களியாட்டத்தில் சந்தேக நபர்கள் கைது

(எம்.ரீ.ஆரிப் )

பொலன்னறுவை பெதிவெவ பகுதியிலுள்ள தனியார் சுற்றுலா ஹோட்டலில் கடந்த சனிக்கிழமை (11) இரவு இடம்பெற்ற முகநூல் களியாட்டத்துக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட45 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதுபான போத்தல்கள்,550 மில்லி கிராம் கொக்கேய்ன் ,11,250 மில்லிகிராம் கஞ்சா என்பனவற்றையும் பொலிஸ ார் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அநுராதபுரம், கெக்கிராவ, தலாவ , மாத்தறை,பெதிவெவ, மாகதுர உள்ளிட்ட பல்வேறு பகுகளைச் சேர்ந்தவர்கள் என சுற்றிவளைப்பை மேற்கொண்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த சந்தேக நபர்களால் அனுமதிப்பத்திரம் இன்றி மதுபானம் உற்பத்தி செய்த இருவர் ,550 மில்லிகிராம் கொக்கெய்ன் வைத்திருந்த ஒருவரும் 11250 மில்லிகிராம் கஞ்சா வைத்திருந்தாக கூறப்படும் நபரொருவர் உள்ளிட்ட பத்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விசேட சுற்றுவளைப்பை பொலன்னறுவை கலால் அதிகாரிகளும் அரலகங்வில பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து கைது செய்துள்ளனர்.

# சிறந்த அடைவுகளை பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு



(எம்.யூ.எம்.சனூன்)

சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணியக கல்விக்கு கரம் கொடுப்போம் எனும் தொனிப்பொருளில் புத்தளம் ஆலங்குடா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் விஷேட நிகழ்வுகள் நடைபெற்றன.

2023ஆம் ஆண்டு சிறந்த அடைவுகளை பெற்ற மாணவ, மாணவிகள் மற்றும் பல்கலைக்கழகம் தெரிவான மாணவ மாணவிகளை கௌரவிக்கும் வகையிலும், புதிய கண்டுபிடிப்புகளான மோட்டார் சைக்கிள் பொருட்களை வைத்து கார் வண்டியை கண்டுபிடித்த மாணவனையும், உப்பு நீர் மூலமாக இயங்கும் மோட்டார் சைக்கிளை கண்டுபிடித்த இரண்டு மாணவர்களையும் கௌரவிக்கும் வகையில் சர்வதேச மனித உரிமைகள் இளம் கண்டுபிடிப்பாளர்களை கௌரவிக்கும் வகையிலும் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் ஆலங்குடா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.எச்.ஏ.சக்கூர், பிரதி அதிபர்களான எம்.ஏ.கலாம், எம்.பி.பைசுர் ரஹ்மான், எம்.ஐ.சிக்கந்தர், சர்வதேச மனித உரிமைகள் உலகளாவியப் பணி கல்வி சார் ஒருங்கிணைப்பாளர் ஐ.எம்.சபூர்தீன், ஆரிஹாமம் பாத்திமா மகளிர் இஸ்லாமிய கற்கை நிறுவன அதிபர் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் உலகளாவியப்பணி இஸ்லாமிய கலாசார ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷெய்க் எஸ்.வை.எம். சிஹான் (ஜமாலி), சர்வதேச மனித உரிமைகள் உலகளாவியப்பணி உறுப்பினர் ரிஸ்வி எஸ்.ஹமீட் பங்குபற்றினர்.

நிகழ்வின்போது சிறந்த சித்தி அடைந்த மாணவ மாணவிகளை கௌரவிக்கும் வகையில் விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் புத்தளம் ஆலங்குடா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் புதிய கண்டுபிடிப்பாளர்கள் இரு வரைப் பாராட்டும் வகையில் சர்வதேச மனித உரிமைகள் உலக ளாவிய பணியகம் மூலம் விருதுகள் மற்றும் குளோபல் ஏசியன் அச்சீவர்ஸ் மூலமாக சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## கற்பிட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

(எம்.எச்.எம்.சியாஜ்)

கற்பிட்டி பிரதேச ஒருங்கி ணைப்புக் குழுவின் புதிய தலை வராக தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம் பைசல் நியமிக்கப்பட்டுள்ளார்.

கற்பிட்டி பிரதேச ஒருங்கி ணைப்புக் குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் காலை நடைபெறவுள்ளது.

தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்புடையதாக பிரதேச மட்டத்தில் அரச நிறுவ னங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சகல அபிவிருத்திப் பணிகளையும் ஒருங்கிணைப்பு செய்வதற்கான கூட்டமாகும்.

அவற்றை நடைமுறைப்படுத் துவதும், வழிநடத்துதல் மற்றும் நடவடிக்கைகளைப் பின்தொடர்தல் என்பன பற்றிய பரிந்துரைகளை 2025-01-16 நண்பகல் 12.30 மணிக்கு முன் சமர்பிக்குமாறு கற்பிட்டி பிரதேச செயலகத்தின் உதவி செயலாளர் பீ.ஜீ.எஸ்.என் பிரியதர்ஷினி தெரிவித்துள்ள மையும் குறிப்பிடத்தக்கது.



(க.மகாதேவன்)

தைத்திருநாளை முன்னிட்டு உடப்பு பொது சந்தையில் பொங்கலுக்குத் தேவையான பொங்கல் பானைகள் விற்பனைக்கு தயாராகவுள்ளமையை படத்தில் காணலாம்.

# குருக்கள் மடத்தில் திருவாசக முற்றோதல்



(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு குருக்கள்மடம் ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலயத்தில் பிராந்திய சிவசங்கரி திருமுறை ஓதுவார் சங்கத்தினரால் மாணிக்கவாசகப் பெருமான் அருளிச்செய்த திருவாசக முற்றோதல் நிகழ்வு சனிக்கிழமை (11) நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ செல்லக் கதிர்காம சுவாமிக்கு விசேட பூஜை வழிபாடுகள் வசந்த மண்டப பூஜைகளை மாணிக்கவாசகர் சுவாமிகளின் திருவுருவத்திற்கு ஆராதனை வழிபாடு இடம்பெற்றது. இதனைத் தொடரந்து மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசகதிருப்பதிகம் அடியார்களால் ஓதப்பட்டது.

மார்கழி மாதத்தின் சிறப்பு வாய்ந்த விரதங்களுள் ஒன்றாக காணப்படும் திருவெம்பாவை விரதத்தின், ஆருத்ரா தரிசனம் எனப்படும், திருவாதிரை தீர்த்த உற்சவத்திற்கு முதல் திருவெம்பாவை காலத்தில் திருவாசக முற்றோதல் ஓதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகள் யாவும் மட்டக்களப்பு குருக்கள்மடம் ஸ்ரீலஸ்ரீ செல்லக் கதிர்காம ஆலயப்பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் ஆலய பிரதம குரு சிவகரன் குருவினால் ஆலய கிரியைகள் வழிபாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கைதிகளின் விடுதலைக்காக கையெழுத்து போராட்டம்

(வெல்லாவெளி நிருபர்)






தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலைக்காக கையெழுத்துப் போராட்டம் களுவாஞ்சிகுடியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் மற்றும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூக மயப்படுத்தப் பட்ட பின்னரும், நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீளவும் கைது செய்யபப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும், விடுதலை செய்யக் கோரி போராளிகள் நலன்புரிச் சங்கத்தினால் வடக்கு, கிழக்கு மாகாணம் தழுவிய கையெழுத்து சேகரிப்பு போராட்டம் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் போராளிகள் நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்ற இந்நிகழ்வென்று சனிக்கிழமை(11) மாலை களுவாஞ்சிகுடியில் நடைபெற்றது.

தமது இச்செயற்பாட்டின் மூலம் எதிர்வரும் சுதந்திர தினத்திலாவது அரசியல் கைதிகளை விடுதலை செய்ய இலங்கை அரசாங்கம் முன்வர வேண்டும் எனவும் போராளிகள் நலன் புரிச்சங்கத்தினர் மேலும் தெரிவித்தனர்.

# ஒதுக்கு காணிகளை அத்துமீறி கையகப்படுத்தியதை நீர்ப்பாசன அதிகாரிகள் சோதிக்க வேண்டும்

(முகம்மட் முக்தார்)

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள துரிசுகள், அணைக்கட்டுக்களுக்கு அருகாமையில் ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கு காணிகளை தனியார் சட்டவிரோதமாக பிடித்து வைத்திருப்பதனால் பாரிய அழிவுகள் ஏற்படுவதாக அம்பாறை அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம தெரிவித்தார்.

இவ்வாறு ஒதுக்கு காணிகளாக உள்ளவற்றை தனியார் சட்டவிரோதமாக பிடித்துவைத்திருப்பதை நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் உடனடியாக களப்பரிசோதனை செய்து மீட்டெடுக்க வேண்டும்.

நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளின் கவனமின்மையும் நீர் முகாமைத்துவில் உள்ள குறைபாடுகளுமே ஒவ்வொரு வெள்ளத்தின் போதும் விவசாயிகள் பாரிய அழிவுகளை சந்திப்பதற்கு காரணமாகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

சம்மாந்துறை பிரதேசத்தில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பாரிய அளவிலான குழாய்கள் நீர்ப்பாசன திணைக்களத்தின் ஒதுக்கு காணிகளை விடுத்து பிரதான வாய்க்கால்களில் பொருத்தப்பட்டிருப்பதனால் வெள்ளம் ஏற்படும் போது பிரதான வாய்க்கால்களும் உடைந்து நீர்க்குழாய்களும் உடைந்து போகின்றன. எனவே நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்குரிய பெரிய அளவிலான குழாய்கள் வாய்க்கால்களை விட்டு தனியாக பொருத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சம்மாந்துறை நீர்ப்பாசன பிரிவினுள் தான் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் நீர்ப்பாசன ஒதுக்கு காணிகள் தனியாரால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பாக சம்மாந்துறை பிரதேச செயலாளர், சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியிலாளர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் ஒதுக்கு காணிகள் அடையாளப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதான குழாய்களை பொருத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் நீர்ப்பாசன திணைக்களத்தின் ஒதுக்கு காணிகளை சட்டவிரோதமான முறையில் ஆக்கிரமித்துள்ளோரை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறும் அதிகாரிகளுக்கு அம்பாறை அரச அதிபர் உத்தரவிட்டார்

# 'சாய்ந்தமருதை ஊடறுத்து செல்லும் கரவாகு ஆறு அகலமாக்கப்பட்டு, ஆழமாக்கப்பட வேண்டும்'

(முகம்மட் முக்தார்)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கரவாகு ஆறு அகலமாக்கப்பட்டு ஆழமாக்கப்பட வேண்டுமென விவசாயிகளும் சுற்றுப்புற சூழல் ஆர்வலர்களும் நீர்ப்பாசன திணைக்கள கல்முனை பிரதேச பொறியியலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரைவாகுப்பற்று ஆறு கல்முனை கரையோரப்பிரதேசத்தில் உள்ள பாரிய ஆறாகும். இந்த ஆறு கடந்த 50 வருடமாக ஆழமாக்கப்படவில்லை.

இவ்வாற்றின் இருமருங்கும் ஒடுக்கமாகி சிற்றோடையாக மாற்றப்பட்டுள்ளது. சாய்ந்தமருது பொலிவேரியன் பாலம் முதல் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு அப்பால் வரை இவ்வாற்றின் கரைகள் சட்டவிரோதமான முறையில் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டு ஆற்றின் அகலம் குறுகி சிற்றோடையாக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக வெள்ள காலத்தில் நீர் பரந்து செல்ல முடியாமல் ஆற்று வெள்ளத்தில் அள்ளுண்டு வரும் புல், பூண்டு, ஆற்றுவாழைகளும் செல்ல முடியாமலும் ஆற்று நீர் கிராமங்களுக்குள் உட்புகுவதனால் பாரிய வெள்ளநிலை வருடாந்தம் ஏற்பட்டு வருகிறது.

நீர்ப்பாசன திணைக்களத்தின் கல்முனை பிரதேச அலுவலகம் கரைவாகு ஆற்றை முறையாக முகாமைத்துவம் செய்யாமலும் சட்டவிரோத ஆக்கிரமிப்புக்களையும் அப்புறப்படுத்தாமலும் ஆற்றின் ஒதுக்குகளை பேணிப் பாதுகாக்கமலும் இருப்பதனால் சட்டவிரோத ஆக்கிரமிப்புக்களும் அதிகரித்துள்ளன.

அண்மையில் ஏற்பட்ட பாரிய வெள்ளம் கரைவாகு ஆறு ஆழமாக்கப்படமையால் பாரிய சேதங்களை ஏற்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.எனவே, கரைவாகுப்பற்று ஆறு நீர்ப்பாசன திணைக்களத்தினால் அகலமாக்கப்பட்டு, ஆழமாக்கப்படுவதுடன் சட்டவிரோத ஆக்கிரமிப்புக்களும் அகற்றப்பட்டு ஆறாகப்பேணப்பட வேண்டுமென கோருகின்றனர்

# கடற்கரையை சுத்தப்படுத்தி, மரம் நடும் திருமலை இளைஞர்கள்



(எம்.பஹத் ஜுனைட்)

"தூய்மையான மற்றும் பசுமையான எதிர்காலத்தை நோக்கி ஒரு படி" என்ற தொனிப் பொருளில் கிண்ணியா - மட்டக்களப்பு வீதி பிரதான கடற்கரையை சுத்தப்படுத்தி, மரம் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (11) நடைபெற்றது.

நிகழ்வு கிண்ணியா நகர சபை செயலாளர் எம். கே.அனீஸ் மேற்பார்வையின் கீழ், முன்னெடுக்கப்பட்டது.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியம் (UNFPA) மற்றும் எலயன்ஸ் டிவலப்மன்ட் டிரஸ்ட் (ADT) நிறுவனங்களின் அனுசரணையில் திருகோணமலை மாவட்டத்தை பிரதிநித்துவப் படுத்திய இளைஞர்களின் சமூக ஒருமைப் பாட்டை ஊக்குவிக்கும் திட்டத்தின் ஒரு அங்கமாக சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நற்பணி கப்சோ ஜபுயுகுளுமுஸ என்ற தொண்டு நிறுவனத்தினால், இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடல் மாசுபாடு மற்றும் காடழிப்பு ஆகியவற்றால், ஏற்படும் குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ள சமூக உறுப்பினர்கள், மற்றும் சுற்றுச் சூழல் அதிகாரிகள் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதன்போது, தன்னார்வ தொண்டர்கள் கடற்கரையிலிருந்து பிளாஸ்டிக், கண்ணாடி மற்றும் பிற கழிவுப்பொருட்களை அகற்றி, கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்கவும், சுத்தமான, பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்தவும் பங்களிப்பினைச் செய்தனர்.மேலும், இந்த பகுதியில் பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்தவும், காற்றின் தரத்தை மேம்படுத்தவும், காலநிலை மாற்றத்தின் விளைவுகளை எதிர்த்துப் போராடவும் மரக்கன்றுகளும் நடப்பட்டன. கப்சோவின் திட்டப்பணிப்பாளர் ஏ.ஜெ. காமில் இம்டாட் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் கள உத்தியோகத்தர்கள் கே.எப். மதீனா, எஸ். சுமன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்

# வயலுக்கு வேலைக்குச் சென்றவர் சடலமாக மீட்பு

(எச்.எம்.எம்.பர்ஸான்)

ஆத்துச்சேனை வயலுக்கு வேலைக்குச் சென்ற நபரொருவர் திடீரென உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரிதிதென்னை – ஆத்துச்சேனை வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ரிதிதென்னை பகுதியைச் சேர்ந்த அபுல் எனுப்படும் நபர் ஒருவரே இவ்வாறு வயல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளதாக விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

மரணத்துக்கான காரணத்தை கண்டறிய உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்படுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வு

பாறுக் ஷிஹான்

பொலிஸ் சேவையில் இணைந்து சுமார் 37 வருடங்களாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பணியாற்றி பல பதவியுயர்வுகளையும் பெற்று இறுதியாக கல்முனை பொலிஸ் நிலைய பதில் தலைமை பொலிஸ் பரிசோதகராக பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் மீரா லெப்பை றபீக்கை கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் தலைமையில் நடைபெற்றது.

அல் ஹிலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை(11) சாய்ந்தமருது பொலிஸ் நிலையமும் பொதுமக்களும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்குமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கே. அஜித் றோஹனவும் கௌரவ அதிதிகளாக அம்பாறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.கே. பண்டார, அம்பாறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் -1 சேனாரத்னவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் றபீகின் சேவையை பாராட்டி அதிகாரிகளாலும் பொது மக்களாலும் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.









அயலக தமிழர் மாநாடு நேற்று முன்தினம் சென்னையில் இடம்பெற்ற நிலையில், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செந்தில் தொண்டமான், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் மரியாதை நிமித்தமாக சந்தித்து கலந்துரையாடினார்.

# யாழ்.பல்கலையில் மலையக தியாகிகள் தினம்






(பு.கஜிந்தன்)

மலையக தியாகிகள் தினம் மற்றும் 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவேந்தல் ஆகியன வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உணர்வுப் பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில், பல்கலைக் கழக பொதுத்தூபியில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

1974ஆம் ஆண்டு நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் அரங்கேற்றப்பட்ட படுகொலைகளால் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட கொடூரம் நிகழ்ந்தது. ஆனால் இன்று வரையில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கான நீதி என்பது மறுக்கப்பட்ட தொன்றாகவே நீள்கின்றது.

அத்துடன் தேயிலைச் செடிகளின் நடுவே உழைப்புச் சுரண்டல்களுக்கும் அடிப்படை உரிமை மீறல்களுக்கு உள்ளாகி அடிமைப் படுத்தப்பட்ட மலையக தமிழ் மக்களினுடைய சமூக அரசியல் விடுதலைக் கான பயணத்தில் தம்முயிர் தந்தவர்களை நினைவேந்தும் முகமாக இந்த நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

## மாத்தளையில் ரயில் பொதிகள் சேவை பாதிப்பு

(எம். சதூர்தீன்)

மாத்தளை ரயில்வே நிலையத்தில் பொதிகளை நிறுக்கும் தராசு கடந்த மூன்று மாத காலமாகச் செயலிழந்துள்ளதால் மாத்தளையிலிருந்து ரயில் மூலம் பொருட்களைப் பொதி செய்து தூர இடங்களுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரயில்வே நிலையத்தில் உள்ள தராசு பழுதடைந்துள்ளதால் பொது மக்கள் தமது வர்த்தக பொருட்களைப் பொதி செய்து ரயில் மூலம் தூர இடங்களுக்கு அனுப்புவதில் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். அத்தோடு பொதிகளுக்கு அறவிடப்பட்டு நாளாந்தம் ரயில்வே திணைக் களத்திற்குக் கிடைக்கப்பெறும் வருமானமும் இதன் காரணமாகப் பாதிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. இவ்விடயம் குறித்து மேற்படி ரயில்வே நிலையத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவிக்கும் போது,

பழுதடைந்துத தராசிற்குப் பதிலாக புதிய தராசொன்றைக் கொள்வனவு செய்வதற்காக தற்போது விலை மனுக் கோரப்பட்டுள்ளது என்றார்.

## அறுவடை வீழ்ச்சி; உரிய விலையின்றி சிரமம்



பெரும்போக செய்கையில் ஏற்பட்ட நோய் தாக்கங்கள் காரணமாக, உரிய விளைச்சல் கிடைக்கவில்லை என்பதோடு அறுவடை செய்கின்ற நெல்லை உரிய விலைக்கு சந்தைப்படுத்தக் கூடிய வசதி இல்லை என்றும் கிளிநொச்சி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி அக்கராயன்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் இம்முறை ஆறாயித்து 374 ஏக்கர் நிலப்பரப்பில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இங்கு மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கையின் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், உரிய விளைச்சல் கிடைக்கவில்லை எனவும் அறுவடை செய்கின்ற நெல்லை உரிய விலைக்கு சந்தைப்படுத்தக் கூடிய வசதி இல்லை என்றும் விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் பொங்கல் பொதிகள்





(ஆ.நரேன்)

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் வவுனியாவில் உள்ள மூன்று அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த சிறார்ககளின் 130 குடும்பங்களுக்கு 325,000 ரூபா செலவில் தைப்பொங்கல் பொதிகளை நேற்று வழங்கி வைத்தது.

வவுனியா – கணேசபுரம் திருமூலர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் 45 குடும்பங்களுக்கும்,

வவுனியா – கணேசபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் 42 குடும்பங்களுக்கும்,

வவுனியா – கோயில் புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் 43 குடும்பங்களுக்கும்,

ஒவ்வொரு பொதியும் 2500 ரூபா பெறுமதியில் 130 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் ஆச்சிரம முதல்வர் அமுதகலாசுரபி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

## கச்சான் சாப்பிட்ட குழந்தை மரணம்

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணத்தில் ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்று கச்சான் பருப்பு புரையேறியதால் நேற்று உயிரி ழந்துள்ளது.

இதன்போது சுன்னாகம், ஐயனார் வீதி பகுதியைச் சேர்ந்த சசிதரன் டனியா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குழந்தை முன்தினம் (11) கச்சான் சாப்பிட்ட வேளை புரையேறியுள்ளது. பின்னர் குழந்தை உறங்கியுள்ளது. உறங்கிய குழந்தை நேற்று முன்தினம் இரவு எழுந்து வாந்தி எடுத்துவிட்டு அமுதவேளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை குழந்தை உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சுவாசக் குழாயில் வேர்க்கடலை சிக்கியதால் மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

## மீன்பிடிக்கச் சென்றவர் திடீர் மரணம்

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணத்தில்,மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் ஒருவர் நேற்று காலை உயிரிழந் துள்ளார். இதன்போது குருநகர் பகுதியைச் சேர்ந்த அல் போன்சோ சந்தியாப்பிள்ளை (வயது 58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

இரண்டு மீனவர்கள் நேற்று முன்தினம் கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில், குறித்த மீனவருக்கு நேற்று உடல் சுகயீனம் ஏற்பட்டது. அவரை ஊர்காவற்துறை வைத்தியசாலையில் சேர்ப்பித்தவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காகச் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## இணுவிலில் கலை விழா





இணுவில் பொது நூலகத்தின் சிறுவர் திறன்விருத்தி மைய மாணவர்களின் கலை விழா நேற்று இணுவில் பொது நூலக மண்டபத்தில், தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக மாகாண கல்வித் திணைக்களத்தின் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி பிரிவு பணிப்பாளர் த.முகுந்தனும், சிறப்பு விருந்தினர்களாக டிப்ளோமா கற்கைநெறிகள் தொழில்நுட்பவியல் கல்லூரியின் பகுதித் தலைவர் பொ.ஜெனார்த்தனனும், மென்பொறியாளர் இராகவனும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

## டன்பார் முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஏகாதசி விரதம்



(பொகவந்தலாவ நிருபர்)

பொகவந்தலாவ ரொப்கில் டன்பார் தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் ஏகாதசி விரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஆலயம் வளாகம் முழுவதும் அலங்கரிக்கப்பட்டு இரண்டு நாட்கள் விரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

பெருந்திரலான பக்த அடியார்கள் கலந்து கொண்டதோடு அன்னதானமும் வழங்கி வைக்கப்பட்டது.

## சிவனொளிபாதமலை யாத்திரிகர் மரணம்

சிவனொளி பாதமலைக்கு புனித யாத்திரை சென்று திரும்பிக் கொண்டிருந்த பெண்மணி ஒருவர், ஞாயிற்றுக் கிழமை (12) காலை 10 மணியளவில் திடீரென சுகயீனமுற்ற நிலையில் உயிரிழந்துள்ளார். சடலம் தற்போது மஸ்கெலியா வைத்தியசாலை யின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.ஹெய்யந்துடுவ. மஹாவியைச் சேர்ந்த குருப்பு ஆராச்சிகே கெருதத்தி (வயது 61) என்பவரே மரண மடைந்துள்ளார். மேலதிக விசாரணைகளை நல்லதண்ணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். 2024/2025 சிவனொளி பாதமலை பருவகாலம் ஆரம்பமானதிலிருந்து இரண்டாவது மரணம் சம்பவித்ததுள்ளது.

## புளியின் விலை அதிகரிப்பு

உள்ளூர் சந்தையில் புளி பற்றாக்குறை காரணமாக, ஒரு கிலோ கிராம் புளியை 2,000 ரூபாய் சில்லறை விலையில் விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக ஹற்றன் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். பற்றாக்குறை காரணமாக, அதிகபட்ச சில்லறை விலை ரூ.350-400க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ கிராம் புளி, ரூ.2,000க்கு விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

இந்த நாட்களில் புளிய மரங்களில் அறுவடை இல்லை என்றும், மார்ச் மாத இறுதியில் புளி அறுவடை முடியும் வரை இந்தப் பற்றாக்குறை தொடரும் என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர்.





தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் 'அற்றார் அழிபசி தீர்த்தல்' என்ற திட்டத்தின் கீழ் மண்பானைப் பொங்கல் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (11) சண்டிலிப்பாயில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், பொருளாளர் க.கேதீஸ்வரநாதன் ஆகியோர் கலந்து கொண்டு பொங்கல் பொதிகளை வழங்கி வைத்தனர். (படங்கள்: ரகுபரன்)




# மகா கும்பமேளா கொண்டாட்டம் ஆரம்பம்

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் நகரின் திரிவேணி சங்கமத்தில், மகா கும்பமேளா இன்று ஆரம்பமாகி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 26ஆம் திகதியுடன் (மஹாசிவராத்திரி) முடிவடைகிறது. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடப்பதால், கும்பமேளா நிகழ்ச்சி சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. மிகப்பெரிய ஆன்மிக கலாசார விழாவான இந்த மகா கும்பமேளா, தொடர்ந்து 45 நாட்கள் நடைபெறுவதுடன் உலகம் முழுவதும் இருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மகா கும்பமேளா நிகழ்ச்சிக்கு மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான உத்தரபிரதேச அரசு பல்வேறு ஏற்பாடுகளை செய்துள்ளது.

மேலும் விழாவில் கலந்து கொள்ள வருபவர்களுக்காக சிறப்பு ரயில்கள் மற்றும் தற்காலிக குடில்களை மாநில அரசு அமைத்துள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு தனி சிற்றுண்டி பகுதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பக்தர்களின் வசதிக்காக பல்வேறு இடங்களில் மருத்துவ உதவி மையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மகா கும்பமேளா இன்று தொடங்குவதை முன்னிட்டு, மலைக் குகைகளிலும் வனங்களிலும் வசிக்கும் நாகா துறவிகள் உள்ளிட்ட பல வகை துறவிகளும் குவிந்துள்ளனர். பிரயாக்ராஜ் நகரை நோக்கி சாதுக்களும், துறவிகளும், சந்நியாசிகளும், அகோரிகளும் வந்த வண்ணம் உள்ளனர். இந்நிலையில், விதவிதமான வேடங்களில் வந்த அகோரிகள் வண்ணப் பொடிகளை தூவியும் கழுத்தில் மண்டை ஓடு மாலையுடன் மந்திரங்கள் முழங்க தெருக்களில் உலா வருவதை காணக் கூடிய தாகவுள்ளது.



# திருப்பூரில் பங்களாதேஷினர் 30 பேர் கைது

திருப்பூர் பல்லடம் அருகே, போலி ஆதார் அட்டைகளைக் கொடுத்து சட்டவிரோதமாக தங்கியிருந்த பங்களாதேஷைச் சேர்ந்த 30 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருப்பூர் மாவட்டத்தில் பல்லடம் மங்கலம், ஊஞ்சுக்குளி பகுதியில் சட்டவிரோதமாக பங்களாதேஷினர் தங்கியிருப்பதாக தனிப்படை பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. சந்தேகத்தின் பேரில், சிலரிடம் பொலிஸார் விசாரணை நடத்தினர். அப்போது போலி ஆதார் அட்டைகளைக் கொடுத்து சட்டவிரோதமாக, பங்களாதேஷ் நாட்டைசேர்ந்த சிலர் பதுங்கி இருப்பது கண்டுபிடிக் கப்பட்டது.

இதனையடுத்து, சட்டவிரோதமாக தங்கியிருந்த பங்களதேஷைச் சேர்ந்த 30 பேரைக் கைது செய்த, பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். அவர்களிடமிருந்து ஆதார் உள்ளிட்ட ஆவணங்களை பறிமுதல் செய்தனர். சிலரிடம் ஆவணங்கள் இருந்தன. மற்ற வர்கள் முறைகேடாக தங்கியிருந்தது தெரிந் தது. கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை நடத்தி வருகிறோம் என பொலிஸார் தெரிவித்தனர்.




# குடியரசு தின விழா சிறப்பு விருந்தினராக இந்தோனேஷியா ஜனாதிபதி



இந்த ஆண்டு குடியரசு தின விழா சிறப்பு விருந்தினராக இந்தோனேஷியா ஜனாதிபதி பிரபோவா சுபியாண்டோ பங்கேற்பார் என தகவல் வெளியாகியுள்ளது. ஆண்டுதோறும் நடக்கும் குடியரசு தின விழாவின் போது உலக நாடுகளை சேர்ந்த தலைவர்களை இந்தியா அழைப்பது வழக்கம். கடந்த 2024ஆம் ஆண்டு, பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் பங்கேற்றார்.

இந்நிலையில், இந்த ஆண்டு குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக இந்தோனேஷியா ஜனாதிபதி பிரபோவோ சுபியாண்டோ பங்கேற்பார் என தகவல் வெளியாகி உள்ளது. இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா செல்லும் பிரபோவோ சுபியாண்டோவுடன் பிரதமர் மோடி இரு தரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, இந்திய பயணத்தை முடித்துக் கொண்டு பாகிஸ்தானுக்கு செல்லும் வகையில் பிரபோவோ சுபியாண்டோ பயணம் திட்டமிடப்பட்டிருந்ததாக பாகிஸ்தான் ஊடகங்கள் வெளியிட்டிருந்தன. ஆனால், தற்போது இந்த பயணத்தை அவர் இரத்து செய்துள்ளதாக தெரிகிறது.

இதற்கு முன் 2024இல் பிரான்ஸ் ஜனாதிபதி மேக்ரான், 2023இல் எகிப்து ஜனாதிபதி அப்தெல் பதா எல் சிசி, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கொவிட் பரவல் காரணமாக யாரும் பங்கேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ட்ரம்ப் பதவியேற்பு விழாவில் ஜெய்சங்கர் பங்கேற்பு

டொனால்ட் ட்ரம்ப்பின் பதவியேற்பு விழாவில், இந்தியா சார்பில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் பங்கேற்கவுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சியின் சார்பில் போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப் வெற்றியைத் தொடர்ந்து, வரும் 20ஆம் திகதி, அமெரிக்க ஜனாதிபதியாக அவர் பதவியேற்கவுள்ளார். அந்நாட்டு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கவுள்ளார். பதவிக்காலம் முடிவடையும் ஜனாதிபதி ஜோ பைடன், விழாவில் கலந்து கொண்டு அதிகாரத்தை ட்ரம்பிடம் ஒப்படைப்பார். இவ்விழாவில் பல நாட்டு தலைவர்கள் கலந்து கொள்ள இருக்கின்றனர். பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்ட பிறகு ட்ரம்ப் உரையாற்றுவார்.



இந்நிலையில், பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ளும்படி இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதனையடுத்து, இந்தியா சார்பில், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கலந்து கொள்கிறார். பதவியேற்பு விழா முடிந்ததும், புது நிர்வாகத்தினரை சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்து ஜெய்சங்கர் ஆலோசனை நடத்துவார் என வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# ஜாபா மாத்திரைகள் பறிமுதல் 2 பேர் கைது



வடகிழக்கு மாநிலமான திரிபுராவில் தடை செய்யப்பட்ட ஜாபா மாத்திரைகளை கடத்திய 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

அம்மாநிலத்தின் மேற்கு திரிபுரா மாவட்டத்தில், பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பட்டாலா பகுதியில் நேற்று (12) சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேகாலயா மாவட்டத்தில் இருந்து வந்த சீமெந்து லொறி ஒன்றியில் சோதனை செய்தபோது அதில் சுமார் ஒரு இலட்சம் ஜாபா மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, அந்த லொறியின் சாரதி ஜமால் ஹீசைன் (வயது 44) மற்றும் அவரது உதவியாளர் மிண்டு பர்மன் (29) ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரின் மீதும் போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், அவர்கள் இருவரிடமும் விசாரணை நடைபெற்று வருவதாகவும், இந்த கடத்தலில் யாருக்கெல்லாம் தொடர்புள்ளதோ அவர்கள் அனைவரையும் கைது செய்யவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# டுபாய் கார் ரேஸில் அஜித் அணி மூன்றாமிடம்

டுபாயில் நடைபெற்ற சர்வதேச அளவிலான 24H சீரிஸ் கார் ரேஸில் அஜித்குமார் தலைமையிலான அஜித்குமார் ரேஸிங் அணி மூன்றாவது இடம்பிடித்து அசத்தியுள்ளது. விடாமுயற்சி, குட் பேட் அக்லி முதலிய இரண்டு திரைப்படங்களில் ஒரே நேரத்தில் நடித்து முடித்த நடிகர் அஜித்குமார், படப்பிடிப்பு வேலைகளை முடித்தபிறகு டுபாயில் நடக்கும் கார் பந்தயத்தில் கலந்துகொள்ள புறப்பட்டுச்சென்றார். சமீபத்தில் 'அஜித்குமார் ரேஸிங்' என்ற கார் ரேஸிங் அணியை உருவாக்கிய நடிகர் அஜித்குமார், தன்னுடைய அணியுடன் சேர்ந்து அடுத்தடுத்து நடக்கவிருக்கும் கார் பந்தயங்களில் அடுத்த 9 மாதங்களுக்கு பங்கேற்கவிருப்பதாக தெரிவித்துள்ளார்.

துபாயில் நடைபெற்றுவரும் 24H கார் ரேஸில் கலந்துகொண்ட அஜித்குமார், கார் பந்தயங்கள் நடைபெறும் காலங்களில்






படங்களில் நடிக்கப்போவதில்லை என்றும், ரேஸ் இல்லாத ஒக்டோபர் – மார்ச் இடையேயான காலகட்டத்தில் படத்தில் நடிக்கப்போவதாகவும் தெரிவித்திருந்தார். இந்நிலையில் தகுதிச்சுற்றில் 7வது இடத்தை பிடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறிய அஜித்குமார் ரேஸிங் அணி, டுபாயில் நடைபெற்ற 992 பிரிவு கார் பந்தயத்தில் 3ஆவது இடத்தை பிடித்து அசத்தியுள்ளது. அந்த வெற்றியை அணியுடன் சேர்ந்து அஜித்குமார் துள்ளிக்குதித்து கொண்டாடினார்.

அஜித்குமார் ரேஸிங் அணியால் சனிக்கிழமை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டதில், அஜித் குமார் குறிப்பிட்ட ரேஸில் மட்டுமே கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் அஜித்குமார் அணி போர்ஷே 992 கப் கார் (எண் 901) ரேஸ், போர்ஷே கேமன் GT4 (எண் 414) ரேஸ் என இரண்டு பிரிவுகளில் பங்கேற்பதாக தெரிவிக்கப்பட்டது. இதில் GT4 ரேஸில் மட்டும் அஜித் பங்கேற்பார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இரண்டு ரேஸின் முடிவில் அஜித்குமார் அணியானது சர்வதேச அளவில் போர்ஷே 992 கப் கார் ரேஸ் பிரிவில் 3ஆவது இடத்தை பிடித்து அசத்தியது. முதல்முறையாக ஒரு சர்வதேச ரேஸில் பங்கேற்ற அஜித்குமார் அணி, முதல் பங்கேற்பிலேயே 3ஆவது இடத்தை பிடித்தது பெரிய மகிழ்ச்சியை அணிக்குள் ஏற்படுத்தியது. தேசியக்கொடியுடன் உற்சாகத் துடன் வெளியில் ஓடிவந்த அஜித்குமார், இந்திய தேசியக் கொடியை கையில் ஏந்திய படி இரசிகர்களிடம் மகிழ்ச்சியை பகிர்ந்துகொண்டார். GT4 பிரிவில் அஜித் தன்னுடைய சிறந்த பங்களிப்பை அளித்ததாகவும், பிரேக் ஃபெய்லியரால் ஏற்பட்ட விபத்திற்கு பிறகு அவர் சிறப்பாக செயற்பட்டதாகவும் அஜித்குமார் ரேஸிங் அணி தெரிவித்துள்ளது. 992 பிரிவில் 3ஆவது இடம்பிடித்த அஜித்குமார் ரேஸிங் அணி, ஒட்டுமொத்தமாக 23வது இடத்தை பிடித்துள்ளது.

# இரு செயற்கைக்கோள்கள் இடையேயான தூரம் 3 மீட்டராக குறைப்பு

விண்வெளியில் விண்கலன்களை இணைக்கும் "டாக்கிங்" சோதனையை வெற்றிகரமாக செய்து முடிக்க இஸ்ரோ விஞ்ஞானிகள் முயற்சி செய்து வருகின்றனர். இரு செயற்கைக்கோள்கள் இடையேயான தூரம் 230 மீட்டர் தூரத்திலிருந்து 3 மீட்டராக குறைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச விண்வெளி மையத்தைப் போல, வரும் 2035ஆம் ஆண்டுக்குள் தனி விண்வெளி மையத்தை அமைக்க இந்தியா முயற்சித்து வருகிறது. இதன் முன்னோட்டமாக, இரு செயற்கைகோள்களை விண்வெளியில் இணைக்கும் முயற்சியில் இஸ்ரோ ஈடுபட்டுள்ளது. இதற்காக, கடந்த வியாழக்கிழமை, தலா 220 கிலோ எடை கொண்ட சேஸர், டார்கெட் ஆகிய விண்கலன்களை உள்ளடக்கிய ஸ்பேடெக்ஸ் விண்கலன்கள், பி.எஸ்.எல்.வி. சி60 ரொக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. அத்தோடு, 24 ஆய்வு கருவிகளும் அனுப்பி வைக்கப்பட்டன.

ஜன 7, 9 ஆகிய திகதிகளில் செயற்கைக்கோளில் இருந்த கூடுதல் உந்து சக்தி காரணமாக டாக்கிங் செய்ய முடியாமல் ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில், நேற்று (12) உந்து




சக்தி குறைக்கப்பட்டு, மெல்ல மெல்ல செயற்கைகோள்களுக்கு இடையிலான தூரம் குறைக்கப்பட்டு வருகிறது என இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

டாக்கிங் சோதனையை வெற்றிகரமாக செய்து முடிக்க, இஸ்ரோ விஞ்ஞானிகள் மும்முரமாக செயல்பட்டு வருகின்றனர். இரண்டு விண்கலங்களுக்கு இடைப்பட்ட தொலைவு 230 மீட்டர் தூரத்திலிருந்து 15 மீட்டராக குறைக்கப்பட்டது என இஸ்ரோ தெரிவித்தது. பின்னர் படிப்படியாக அவற்றுக்கு இடையேயான தூரம் 3 மீட்டராக குறைக்கப்பட்டது.

விண்வெளியில் இஸ்ரோ இப்போது செய்யும் டாக்கிங் சோதனையை, உலகில் மூன்று நாடுகள் மட்டுமே இதுவரை வெற்றிகரமாக செய்திருக்கின்றன. ரஷ்யா, அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா இந்த டாக்கிங் சோதனையை செய்ய இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

உலக வலம் WORLD NEWS
பா. கிருஷிகா

# சொத்து மதிப்பை கண்டறிய "சில்வர்" நோட்டீஸ்: இன்டர்போல்

உள்நாட்டில் சட்டவிரோதமாக சம்பாதிக்கும் பணத்தை வெளிநாடுகளில் பதுக்குபவர்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க இன்டர்போல் அமைப்பு "சில்வர்" நோட்டீஸ் என்ற புதிய அம்சத்தை அறிமுகம் செய்துள்ளது.

சர்வதேச குற்ற நடவடிக்கைகளை தடுப்பதை நோக்கமாக கொண்டு இன்டர்போல் எனப்படும் சர்வதேச காவல் துறை அமைப்பு கடந்த 1923 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பில் உலகில் உள்ள 184 நாடுகள் அங்கம் வகித்து வருகின்றன. இந்த அமைப்பில் உள்ள உறுப்பு நாடுகளின் காவல்துறைகளுக்கிடையிலான ஒத்துழைப்பு. பிறநாடுகளில் பதுங்கி அல்லது தங்கியிருக்கும், தேடப்படும் நபர்களை கைது செய்து ஒப்படைப்பது. சர்வதேச குற்றச்செயல்களை புலனாய்வு செய்வது ஆகியவை இந்த அமைப்பின் பணிகளாகும். இந்த அமைப்பின் தலைமையகம் பிரான்ஸ் நாட்டில் உள்ள லியான்ஸ் நகரில் அமைந்துள்ளது. இந்நிலையில், உள்நாட்டில் சட்டவிரோதமாக சம்பாதிக்கும் பணத்தை வெளிநாடுகளில், பதுக்குபவர்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க இன்டர்போல் அமைப்பு "சில்வர்" நோட்டீஸ் என்ற புதிய அம்சத்தை அறிமுகம் செய்துள்ளது.




மாபியா கும்பலை சேர்ந்த ஒருவரின் சொத்து விபரங்களை கேட்டு இத்தாலி நாட்டிற்கு முதல் சில்வர் நோட்டிஸை இன்டர்போல் வழங்கியுள்ளது. சோதனை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்த திட்டத்தில் இந்தியா உட்பட 52 நாடுகள் இணைந்துள்ளன.

# ஜோ பைடனின் பிரியாவிடை உரை



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் 20ஆம் திகதி நண்பகல் வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேறுகிறார். அதற்கு முன்பாக வருகிற 15ஆம் திகதி நாட்டு மக்களுக்கு பிரிவுபசார உரையாற்றுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடந்த ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிட்ட ட்ரம்ப் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட ஜனநாயக கட்சி வேட்பாளர் கமலா ஹாரிஸ் தோல்வி அடைந்தார். ட்ரம்ப் ஜனாதிபதியாக வருகிற 20ஆம் திகதி பதவி ஏற்கிறார். இந்த நிலையில் தற்போது ஜனாதிபதியாக உள்ள ஜோ பைடன் 20ஆம் திகதி நண்பகல் வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேறுகிறார். அதற்கு முன்பாக வருகிற 15ஆம் திகதி ஜோ பைடன் நாட்டு மக்களுக்கு பிரிவுபசார உரையாற்றுகிறார். அப்போது தனது ஆட்சி நிர்வாகத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 13ஆம் திகதி வெளியுறவுத்துறை சார்பில் உரை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

ஜோ பைடன் தான் பதவியில் இருந்து வெளியேறுவதற்கு முன்பு தனது மகன் உட்பட பலருக்கு பொது மன்னிப்பு வழங்கி இருந்தார். இதற்கிடையே மேலும் பலருக்கு பொது மன்னிப்பு வழங்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே ஜோ பைடன் எதற்கும் என்னை மன்னித்துக் கொள்வது பற்றி நான் யோசிக்கவில்லை. நான் எந்தத் தவறும் செய்யவில்லை. கமலா ஹாரிஸ் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தகுதியானவர். ஆனால் அது அவரே எடுக்க வேண்டிய முடிவாக இருக்கும் என்றார்.

ஜனாதிபதி தேர்தலில் ஜோ பைடன் தான் முதலில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். ஆனால் ட்ரம்புடனான நேரடி விவாத நிகழ்ச்சியில் ஜோ பைடன் திணறினார். இதனால் முதுமை காரணமாக ஜனாதிபதி தேர்தலில் இருந்து விலகுவதாக ஜோ பைடன் அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வட கொரிய வீரர்களை கைது செய்தது உக்ரேன்

குர்ஸ்க் பகுதியில் வட கொரிய இராணுவ வீரர்களை நமது வீரர்கள் சிறைபிடித்துள்ளதாக உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

குர்ஸ்க் பகுதியில் வடகொரிய வீரர்களை உக்ரேனின் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.



ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையில் கடந்த 2022 பெப்ரவரி முதல் தீவிரமான போர் நடந்துவருகிறது. மேற்குலகின் நேட்டோ நாடுகளுடன் இணைய முயற்சிக்கும் உக்ரேனின் முயற்சி, ரஷ்யாவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் என தெரிவித்து ரஷ்யா போர் தொடுத்த நிலையில், அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் உக்ரேனுக்கு ஆயுதங்களை அனுப்பி ரஷ்யாவுடன் மறைமுக போர் நடத்தி வருகிறது.

இந்நிலையில் ரஷ்யாவுக்கு ஆதரவாக வட கொரிய வீரர்கள் 12,000 பேர் அனுப்பி வைக்கப்பட்டதாக உக்ரேன், தென் கொரியா, அமெரிக்க நாடுகள் எச்சரித்தன. இடையில் போரில் வட கொரிய வீரர்கள் மொழி புரியாமல் ரஷ்ய வீரர்களையே சுட்டது என பலவாறான தகவல்கள் வெளிவந்தன. இந்நிலையில் ரஷ்யாவில் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் உள்ள குர்ஸ்க் பகுதியில் இரண்டு வடகொரிய வீரர்களை உக்ரேனின் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

இதுகுறித்து தனது எக்ஸ் சமூக வலைத்தளத்தில் உறுதிப்படுத்தியுள்ள உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, குர்ஸ்க் பகுதியில் வட கொரிய இராணுவ வீரர்களை நமது வீரர்கள் சிறைபிடித்துள்ளனர். காயமடைந்த இரண்டு வீரர்கள், கீவ் இற்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் இப்போது பாதுகாப்பு படை கட்டுப்பாட்டில் உள்ளனர். இது எளிதான காரியமல்ல. உக்ரேனுக்கு எதிரான போரில் வட கொரியாவின் ஈடுபாட்டிற்கான எந்த ஆதாரத்தையும் விட்டுவைக்காமல் அழிக்க களத்தில் சண்டையிட்டு காயமடைந்த வட கொரிய வீரர்களை அவர்களே கொலை செய்வார்கள்.

இதை முறியடித்து இரண்டு வட கொரிய வீரர்களை எங்கள் படை சிறைபிடித்துள்ளமை பாராட்டத்தக்கது. அனைத்து போர்க் கைதிகளையும் போலவே, இந்த இரண்டு வட கொரிய வீரர்களும் தேவையான மருத்துவ உதவியைப் பெறுகிறார்கள். பத்திரிகையாளர்கள் இந்தக் கைதிகளை அணுக அனுமதிக்குமாறு படையினருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். என்ன நடக்கிறது என்பது பற்றிய உண்மையை உலகம் அறிய வேண்டும் என பதிவிட்டுள்ளார்.

# ரஷ்ய நிறுவனங்கள் மீது ஜப்பான் பொருளாதார தடை




தொழில்நுட்பம் மற்றும் இயந்திர உற்பத்தி உள்ளிட்ட ரஷ்ய இராணுவம் சார்ந்த 22 தொழிற்சாலைகளுக்கு ஏற்றுமதி தடை ஜப்பானால் விதிக்கப்பட்டுள்ளது. நேட்டோ கூட்டணியில் இணைய முயன்ற உக்ரேன் மீது ரஷ்யா 2023ஆம் ஆண்டு போர் தொடுத்தது. இதில் அமெரிக்கா உட்பட பல ஐரோப்பிய நாடுகள் உக்ரேனுக்கு ஆதரவாக செயற்படுகின்றன. எனவே உக்ரேனுக்கு ஆயுதங்கள் மற்றும் பொருளாதார உதவிகளை அந்த நாடுகள் வழங்குகின்றன. அதேபோல் ரஷ்யா மீது பல்வேறு பொருளாதார தடைகளும் விதிக்கப்படுகிறது. அதன்படி உக்ரேனுக்கு தனது ஆதரவை காட்டும் வகையில் ரஷ்யாவைச் சேர்ந்த 11 தனிநபர்கள், 29 நிறுவனங்கள் மற்றும் 3 வங்கிகள் மீது ஜப்பான் பொருளாதார தடை விதித்துள்ளது. மேலும் தொழில்நுட்பம் மற்றும் இயந்திர உற்பத்தி உள்ளிட்ட ரஷ்ய இராணுவம் சார்ந்த 22 தொழிற்சாலைகளுக்கு ஏற்றுமதி தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து ரஷ்யாவுக்கு ஏற்றுமதி தடை உள்ள 335 பொருட்களின் பட்டியலுக்கும் ஜப்பான் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நைஜீரியாவில் பயங்கரவாத தாக்குதல்: 21 பேர் பலி



நைஜீரியாவில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் அரசு ஆதரவு படையினர் 21 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு நைஜீரியா. இந்நாட்டில் ஐ.எஸ், அல்கொய்தா, போகோ ஹராம் போன்ற பயங்கரவாத அமைப்புகளும், பல்வேறு கிளர்ச்சியாளர்கள் குழுக்களும் செயற்பட்டு வருகின்றன.

அதேபோல், கொள்ளை, கொலை, பணத்திற்காக பொதுமக்கள், பள்ளிக்குழந்தைகள், கால்நடைகளை கடத்தும் செயலில் ஈடுபடும் "பண்டிட்ஸ" என்ற கும்பல்களும் செயற்பட்டு வருகிறது. இந்த பண்டிட்ஸ் கடத்தல் கும்பலை நைஜீரியா பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ளது. இந்த குழுக்கள் பொதுமக்கள், பாதுகாப்பு படையினரை குறிவைத்து அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த குழுக்களை ஒடுக்கும் நடவடிக்கையில் இராணுவம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. அதேபோல், அரசு ஆதரவு பெற்ற படையினரும் இந்த பயங்கரவாத குழுக்களுக்கு எதிராக போராடி வருகின்றன.

இந்நிலையில், நைஜீரியாவின் கட்சினா மாகாணத்தில் அரசு ஆதரவு படையினரை குறிவைத்து பயக்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 21 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

# இந்தியப் பொருளாதாரம் பலவீனமாகும்; சர்வதேச நாணய நிதியம் கணிப்பு

2025 ஆம் ஆண்டில் இந்தியாவின் பொருளாதாரம் "சற்று பலவீனமாக" இருக்கும் என சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எஃப்) கணித்துள்ளது.

அமெரிக்காவின் வோஷிங்டன் நகரில் நிருபர்கள் குழுவுடன் நடைபெற்ற வருடாந்த ஊடக சந்திப்பில் ஐஎம்எஃப் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா கலந்துகொண்டார். உலகப் பொருளாதாரம் நிலைத்தன்மையுடன் இருக்கும் நிலையில், இந்திய பொருளாதாரம் சற்று பலவீனமடையும். நாங்கள் முன்பு எதிர்பார்த்ததை விட அமெரிக்கா சற்று சிறப்பாக செயற்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியம் சற்று ஸ்தம்பித்துள்ளது, இந்தியா கொஞ்சம் பலவீனமாக உள்ளது. பிரேசில் உயர் பணவீக்க பாதிப்பை சந்தித்து வருகிறது. சீனா, பண வீக்கத்துக்கு எதிரான பாதிப்பைச் சந்தித்து வருகிறது. பொருட்களின் விலை குறைந்து, வாங்கும் திறன் அதிகரித்திருப்பதால் உள்நாட்டு தேவை அதிகரித்து சவாலான சூழ்நிலை உருவாகியுள்ளது. பொருளாதாரக் கொள்கைகளின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டு மிகவும் நிச்சயமற்ற




தன்மையைக் கொண்டிருக்கும்.

உலகளாவிய அளவில் அமெரிக்கப் பொருளாதாரத்தின் அளவு மற்றும் பங்கை கருத்திற் கொண்டு புதிதாக அமைய உள்ள புதிய அரசின் கொள்கைகள் தாக்கத்தை ஏற்படுத்தும். குறிப்பாக கட்டணங்கள், வரிகள், கட்டுப்பாடுகள் ஆகியவற்றில் புதிய மாற்றம் ஏற்படும். குறைந்த வருவாய் நாடுகளின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் முயற்சிகளில், புதிய பாதிப்புகள் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். உலகளாவிய விநியோகச் சங்கிலி, நடுத்தர பொருளாதார நாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். முக்கியமாக, ஆசிய பிராந்தியத்தில் தாக்கம் இருக்கும் என கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்தார். ஜனவரி 20ஆம் திகதி அமெரிக்காவின் 47 வது ஜனாதிபதியாக பதவியேற்கும் டொனால்ட் ட்ரம்ப், மற்ற நாடுகள் மீது வரி விதிப்பில் கடுமையான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது




# மேற்கிந்தியா-பாகிஸ்தான் டெஸ்ட் போட்டி
## இரு அணிகளின் வீரர்கள் அறிவிப்பு





மேற்கிந்திய தீவுகள் அணி பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இப் போட்டியின் மூலம் 18 ஆண்டுகளுக்கு பின்னர் மேற்கிந்திய தீவுகள் அணி பாகிஸ்தானில் டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இதற்கு முன் கடந்த 2006-ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் அணி பாகிஸ்தான் சென்று டெஸ்ட் தொடரில் விளையாடியது குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக மேற்கிந்திய தீவுகள் அணிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கிந்திய தீவுகள் டெஸ்ட் தொடருக்கான பாகிஸ்தான் அணியை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. ஷான் மசூத் தலைமையிலான இந்த அணியில் நட்சத்திர சுழற் பந்துவீச்சாளர் சஜித் கான் மீண்டும் டெஸ்ட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். அதேசமயம் தொடர்ச்சியாக விளையாடி வரும் நசீம் ஷா, அமர் ஜமால், முகமது அப்பாஸ், மிர் ஹம்ஸா ஆகியோருக்கு இத்தொடரில் ஓய்வளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அறிமுக வேகப்பந்து வீச்சாளர் கஷிப் அலி பாகிஸ்தான் டெஸ்ட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

**மேற்கிந்திய தீவுகள் அணி:**

கிரேக் பிராத்வைட் (கெப்டன்), ஜோசுவா டா சில்வா (துணை கெப்டன்), அலிக் அதானஸ், கேசி கார்டி, ஜஸ்டின் கிரீவ்ஸ், காவேம் ஹாட்ஜ், டெவின் இம்லாச், அமீர் ஜங்கு, மைக்கேல் லூயிஸ், குடாகேஷ் மோட்டி, ஆண்டர்சன் பிலிப், கீமார் ரோச், கெவின் சின்க்ளேர், ஜெய்டன் சீல்ஸ், ஜோமெல் வாரிக்கன்

**பாகிஸ்தான் டெஸ்ட் அணி:**

ஷான் மசூத் (கெப்டன்), சௌத் ஷகீல், அப்ரார் அகமது, பாபர் ஆசம், இமாம்-உல்-ஹக், கம்ரான் குலாம், காஷிப் அலி, குர்ரம் ஷஷாத், முகமது அலி, முகமது ஹுரைரா, முகமது ரிஸ்வான், நோமன் அலி, ரோஹைல் நசீர், சஜித் கான் மற்றும் சல்மான் அலி ஆகா.

# இலங்கை U19 மகளிர் அணி மலேசியா பயணம்






மலேசியாவில் நடைபெறவுள்ள 19 வயதுக்குட்பட்ட மகளிர் ரி20 உலகக் கிண்ணத்தில் விளையாடுவதற்காக இலங்கை அணி நேற்று முன்தினம் (11) காலை மலேசியாவுக்கு புறப்பட்டுச் சென்றது.

இந்தப் போட்டியின் ஆரம்பச் சுற்றில் இலங்கை குழு ஏ விளையாடுகிறது.இப் போட்டியில் 16 அணிகள் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் போட்டி அவுஸ்திரேலியா மற்றும் ஸ்கொட்லாந்து அணிகளுக்கிடையே நடைபெறவுள்ளது. இலங்கையின் முதல் போட்டி ஜனவரி 19 ஆம் திகதி கோலாலம்பூரில் மலேசியாவுக்கு எதிரான போட்டியாகும்.

இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழு வெள்ளிக்கிழமை (10) போட்டிக்கான 15 பேர் கொண்ட அணியை அறிவித்தது. இதில் இலங்கையின் முன்னாள் கெப்டன் திலகரத்ன தில்ஷானின் மகள் லிமான்சா திலகரத்னவும் அடங்குவார்.

மொரட்டுவை வேல்ஸ் கல்லூரியைச் சேர்ந்த மனுதி நாணயக்கார அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# மனம் திறந்த ஜோகோவிக்

டென்னிஸ் உலகின் ஜாம்பவானான நோவக் ஜோகோவிக் தனது 25 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்திற்கான தேடுதலில் இறங்கியுள்ளார். தற்போது அவுஸ்திரேலியாவில் நடைபெறும் தொடரில் விளையாடி வருகின்ற 37 வயதான ஜோகோவிக் இதுவரை 24 கிராண்ட்ஸ்லாம் தொடரை வென்று சாதனை படைத்துள்ளார்.

என்னதான் ஜோகோவிக்கிற்கு 37 வயதானாலும், அவரது டென்னிஸ் வாழ்க்கையில் கடைசி கட்டத்தில் இருந்தாலும் தன்னால் இன்னும் உலகின் மிகச் சிறந்த வீரர்களுடன் போட்டிபோட முடியும் என நம்புவதாக தெரிவித்தார். இதெல்லாம் ஒருபக்கம் இருக்க ஓய்வு குறித்தான முடிவை பற்றியும் யோசிக்கவேண்டும் என கூறியுள்ளார்.

எப்போது ஓய்வு பெறுகின்றோம் என்பதை விட எப்படி ஓய்வு பெறுகின்றோம் என்பது தான் முக்கியம். இந்நிலையில் ஒற்றையர் பிரிவில் 25 கிராண்ட்ஸ்லாம் பட்டன்களை வெல்வதே ஜோகோவிக்கின் தற்போதைய நோக்கமாக உள்ளது. அவருடன் விளையாடி வந்த சமகால வீரர்கள் அனைவரும் ஓய்வை அறிவித்துவிட்டனர்.

பெடரர், நடால் என அனைவரும் ஓய்வை அறிவித்தாலும் ஜோகோவிக் மட்டும் இன்னும் களத்தில் இருக்கின்றார். இதுவே பெரிய விஷயமாக பலரால் பார்க்கப்படும் நிலையில் அவர் 25 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை மட்டும் வென்றால் மேலும் சிறப்பாக இருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இதையடுத்து ஜோகோவிக் தன் தந்தை கொடுத்த அறிவுரை பற்றியும் பேசியுள்ளார்.

ஓய்வு பற்றி என் தந்தை அறிவுரை கூறியிருக்கின்றார். இன்னும் ஏன் ஓய்வு பெறவில்லை. டென்னிஸ் உலகில் நீ சாதிக்காத விஷ யங்களே இல்லை அப்படி இருக்கையில் ஓய்வு பற்றி முடிவெடுக்காமல் இருப்பது ஏன் என்பது போல தன் தந்தை கேட்டதாக கூறியுள்ளார் ஜோகோவிக்.

விரைவில் தான் ஓய்வு பற்றிய முடிவை எடுக்கவேண்டும் என நினைக்கிறேன். அதற்கு முன்பு இந்த தொடரில் சிறப்பாக செயல்படவேண்டும் என்றார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பெரிய தடைகளை சமாளிப்பதில் எனக்கு கஷ்டம் வந்தால், அதிக இடைவெளி அப்போது அறிவிப்பதற்கு கருதுவேன் என்றார் சவால்களை எதிர்கொள்வதில் இருப்பதாக உணர்ந்தால், கண்டிப்பாக ஓய்வை சரியான தருணம் என ஜோகோவிக்.





புத்தளம் உதைப்பந்தாட்ட லீக்கினால் தொடராக நடாத்தப்பட்டு வந்த புள்ளிகள் அடிப்படையிலான உதைப்பந்தாட்ட தொடரின் சம்பியனாக, புத்தளத்தின் லிவர்பூல் கழகம் சம்பியனாக மகுடம் சூடியுள்ளது. (படங்கள் : எம்.யூ.எம்.சனூன்)

# அவுஸ்திரேலிய ஓபன்
## சீனாவின் கின்வென் 2ஆவது சுற்றுக்கு முன்னேற்றம்



டென்னிஸ் போட்டிகளில் ஆண்டுதோறும் அவுஸ்திரேலிய ஓபன், பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் என 4 வகையான கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதன்படி இந்த ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்பேர்னில் நேற்று ஆரம்பமானது.இப் போட்டிகள் 26-ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன் நேற்று முதல் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் சீனாவின் கின்வென் ஜெங், ருமேனியாவின் அன்கா டோடோனி உடன் மோதினார். இந்த போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய அனுபவ வீராங்கனையான கின்வென் ஜெங் 7-6 (7-3), 6-1 என்ற செற் கணக்கில் அன்கா டோடோனியை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

# தமீம் இக்பால் மீண்டும் ஓய்வு அறிவிப்பு...



பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர் தமீம் இக்பால் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளார்.

இக்பால் தனது ஓய்வை அறிவிப்பது இது இரண்டாவது முறையாகும்.

35 வயதான தமீம் இக்பால், ஜுலை 2023 இல் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

ஆனால் 24 மணி நேரத்திற்குள், தனது முடிவை மாற்றிக் கொண்டு, சர்வதேச போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவதாக அறிவித்தார்.

பங்களாதேஷ் பிரதமர் தலையிட்டு சர்வதேச கிரிக்கெட்டில் தொடர்ந்து விளையாடுமாறு தமீம் கேட்டுக் கொண்டதையடுத்து, அவர் தனது முடிவை மாற்றிக் கொண்டார்.

மீண்டும் தமீம் ஓய்வு பெறுவதாக அறிவித்த பிறகு, பல மூத்த பங்களாதேஷ் வீரர்கள் அவரது கோரிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஆனால் தமீம் தனது முடிவை மாற்றப் போவதில்லை என்கிறார்.

தமீம் இக்பால் பங்களாதேஷ் அணிக்காக 391 டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகளில் விளையாடி 15,249 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி முடியும் வரை தமீம் இக்பால் அணியில் நீடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 13ம் திகதி திங்கட்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.